தென்மொழி

இந்தியா என்ருல்
பார்ப்பனீயமும் முதலாளியமும்!

இந்திய ஆட்சி யென்ருல்
இந்திதான் இருக்கும்: இந்திக்
காரன்தான் ஆட்சி செய்வான்!
முந்திய நலன்கள் மூற்றும்
பார்ப்பான்தான் நுகர்வான்; மற்றும்
முதலாளி கூட்டுச் சேர்வான்!
பிந்திய வருணத் தார்கள்,
பிற்பட்டோர், தாழ்த்தப் பட்டோர்,
பிறவியில் வறியோர் யாவும்
சிந்திய நலன்க ளைத்தான்
போராடித் தின்னல் வேண்டும்!
சிறுமையால் சாதல் வேண்டும்!

அனைத்திலும் பார்ப்ப னர்தாம்
ஆளுமைத் தலைமை ஏற்பார்!
அவர் இனத் தவரை யேதாம்
வினைத்துணை யாக்கிக் கொள்வார்!
வேற்றினத் தவருள் நல்ல
வீடண ராகப் பார்த்து,
மனைத்துணை வியரைக் கூட
மாண்பும்மா னமும்இ ழந்தே,
மருவிட அவர்க்குத் தந்தே
எனைத்துணைச் செயலென் ருலும்
எளிதாகச் செய்து கொள்வார்!
இமப்பொருள் திரட்டி வாழ்வார்!

(தொடர்ச்சி உள்ளே)

ஆசிரியர்
பெருஞ்சித்திரனர்

சுவடி : 25
ஓலை : 12

விலை:
உருபா : 2-00

நமக்கு வந்த மடல்கள்.

O : 1436 : மதிப்பிற்குரிய ஐயா, பணிவார்ந்த வணக்கம். எங்களது அழைப்பினை ஏற்று, நெடுந்தொலைவு பயணம் செய்து, சோர்வையும் பொருட்படுத்தாது, தமிழ்க் கலைமன்றத்தின் பாவேந்தர் நூற்றாண்டுச் சிறப்புக் கூட்டத்தில் பங்கேற்று, அரியதொரு சிறப்புரையாற்றியமைக்கு மன்றத்தின் சார்பில் நன்றிப் பெருக்கினைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாவேந்தரின் கருத்துகளைத் தெளிவுபடுத்தி நிறைவு செய்து தமிழ்க்கலை மன்றத்திற்குப் பெருமை சேர்த்துள்ளீர்கள்.

தங்கள் வருகைக்கு மன்றத்தலைவர், துணைத்தலைவர் மற்றும் எனக்கு உறுதுணையாக எப்போதுமே செயலாற்றி வரும் நண்பர்கள் கி. சீரங்கராயன், செ. சண்முகம் ஆகியோரும் தங்கட்கு நன்றி சொல்வதில் என்னோடு பங்கேற்கின்றனர்.

ஆசிரியப் பணியிலிருந்து நான் ஓய்வு பெற்றதைத் தங்களிடம் நான் குறிப்பிடுகையில், 'இறுதி மூச்சுள்ளவரை என் தமிழ்ப் பணிக்கு ஓய்வேயில்லை' என்று விடை கூறியது என்னை நெகிழ வைத்து விட்டது. தங்கள் உழைப்புக்குத் தலை வணங்குகிறேன். என்றாவது ஒருநாள் தமிழ்க்குமுகாயம் உணர்ச்சி பெற்று விழித்தெழும் என்று நம்புகிறேன். தங்கள் பணிவுள்ள,

— பால். சாமுவேல். 'செயலர்' தமிழ்க்கலை மன்றம், தாராபுரம்.

O : 1437 : தமிழின் தந்தை பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு இம் மடலை விடுக்கின்றேன். அய்யா, சுவடி 21, ஓலை 6 இன் தென்மொழி இதழைப் படித்தேன். அதில் 'தென்மொழி- ஒரு சிந்தனை' எனும் தலைப்பைப் படித்து முடித்தவுடன் மிகவும் மனம் நொந்துவிட்டேன்.

'வாய்வீரம் பேசுகிறாய்! துயரில் பின் வாங்குகிறாய்! தாய் நாட்டைப் பார்க்காமல், தன்னலத்தைப் பார்க்கின்றாய்' — என்று தாங்கள் எழுதியிருப்பது முற்றிலும் உண்மை.

நானும் நினைத்துக் கொண்டேன், 'தென்மொழி இதழினைப் படிக்கும் ஒவ்வோர் அன்பரும் வருங்காலத் தமிழக—விடுதலைப் போர் மறவனாகவே வளர்ந்திருப்பான்; எந்த இன்னலைக் கண்டும் அஞ்சமாட்டான்' என்று. ஆனால் இப்போதுதான் புரிந்து கொண்டேன்'' அவர்கள் கோழையுள்ளம் கொண்ட மகளிர் போன்றவர்கள் என்று. மன்னிக்கவும்; இப்போது மகளிரே வீராங்கனைகளாக உள்ளனர். (உண்மையான தமிழ்த்தொண்டும், தமிழின உணர்வும், தாய்நாட்டுப் பற்றும் உள்ளவர்கள் என்னை மன்னிக்கவும்.) இயல்பான எளிய காவல்துறை உசாவலுக்கும், ஆய்வுத் தொல்லைகளுக்குமே அஞ்சுகின்ற இவர்கள் ''தென் மொழி, எனும் தகரியை (பீரங்கியை) எவ்வாறு தொடலாம்? இதுதான் எனது வினா'' ?

இவ்வளவு கோழையுள்ளம் கொண்ட நம் தமிழ் மக்களிடம் பின்னர் எப்படித்தான் வீரத்தினை வரவைப்பது? நான் முன்பே கூறியிருந்ததைப் போல, இக்கால் உள்ள தமிழகம் இழிவான

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

ஊக்கம் இழக்கச் செய்யாதீர்!

ஆக்கம் இழைக்க உதவிலீர் ஆயினும்
ஊக்கம் இழக்கச் செய்யாதீர்—எமை
ஊக்கம் இழக்கச் செய்யாதீர்!

தாக்கம் அடைந்தது தமிழினம் அல்லவோ ?
தமிழ்நிலம் குலைந்த சீர் எடுத்திங்கு சொல்லவோ?
தேக்கம் அடைந்தனர் தமிழர்கள் அனைத்திலும்!
தீந்தமிழ் மொழி, இனம், தேய்ந்தன வினைத்திறம்!
—(ஆக்)

பைந்தமிழ் மொழியினை வளர்த்தல்நம் கடமையே!
பாருக்குள் தமிழரை உயர்த்தல்நம் உரிமையே!
மைந்தரும் அல்லமோ தமிழன்னைக் கின்றையே!
மடமையுள் ஆழ்ந்திடில் நலம்பெறல் என்றையே!
—(ஆக்)

மொழி, இனம், நாட்டினுக் குழைத்தல்எம் கொள்கையே!
மூச்சிலும் பேச்சிலும் செயலிலும் வெல்கையே!
பழி, துயர், இடர்க்குயாம் அஞ்சுதல் இல்லையே!
பறுபல தடை செய்தல் வினைக்கொரு தொல்லையே!
— (ஆக்)

இனம்உய்ய உழைப்பாருக் கிடர்செயல் ஞாயமா?
எதிரிகள் தொல்லைஅந் நிலையினில் ஓயுமா?
மனநலம் கொண்டன்றோ துணைவரல் நல்லது!
மக்களின் வலிவன்றோ எதனையும் வெல்வது?

எம்முடைக் கருத்தெடுத் துலகெலாம் பரப்புக!
ஏட்டிலும் உரையிலும் அவற்றையே நிரப்புக!
உம்முடை உழைப்பிலும் செயலிலும் தமிழினம்
உய்வதே குறியென வாழ்வினை நடத்துக!
— (ஆக்)

(அட்டைப் பாடல் தொடர்ச்சி)

பார்ப்பன ரில், வேங் கட்ட
ராமனென் றாலும், இராசீவ்,
செயலலி தா-என் றாலும்,
ஆர்ப்பரித் தெழுதும் 'துக்ளக்,
'ஆனந்த விகடன்', 'கல்கி'
'தினமலர்'—'மணி—என்றாலும்
நேர்ப்பொருள் உரை, பேச் செல்லாம்
செந்தமிழ் மொழிஇ, னத்தைச்
சீரழிப் பதுவே! இஃதைக்
கூர்ப்பான பார்வை கொண்ட
கொள்கையர் உணர்வார்! காட்டிக்
கொடுப்பவர் உணரார் என்க!



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை-முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன் நிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். தொலைபேசி: (847829)

சுவடி: 25] தி.பி. ௨௦௨௨ சுற—மீன (சன-மார் 91') [ஓலை:

தேர்தல் வேண்டுகை!



கடந்த இரண்டாண்டுகளில் இந்திய அரசில் குழறுபடிகளும் கூத்தடிப்புகளும் சண்டை சள்ளுகளுமே நடந்து வருகின்றன. நல்லவர்களாலும் ஆட்சி செய்ய முடியவில்லை. வல்லவர்களாலும் ஆட்சி அமைக்க முடியவில்லை கொள்கை உள்ளவர்களின் ஆட்சியும் கவிழ்க்கப்படுகிறது; கொள்கையற்றவர்களின் ஆட்சியும் கவிழ்க்கப்படுகிறது. பதவிச் சண்டைக்காரர்களும், பகல் கொள்ளையடிப்பவர்களுமே மேலாங்கி நிற்கின்றனர். குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கின்ற இராசீவ், செயலலிதா, தேவிலால், சுப்பிரமணியம்சுவாமி போன்றவர்களே இந்திய அரசியலை ஆட்டிப்படைக்கின்றார்கள்!

வி. பி. சிங் அரசைச் சந்திரசேகரர் இராசீவுடன் சேர்ந்து கவிழ்த்தார். 11 மாதங்களே ஆட்சியிலிருந்த வி. பி. சிங்கை, அவர் மண்டல் குழு அறிக்கையைச் செயலுக்குக் கொண்டு வர முயற்சி செய்தார் என்பதற்காகவும், அத்வானி, வாச்பேயி முதலிய பச்சைப் பார்ப்பனப் பதடிகள் தலைமையேற்றிருக்கும் பாரதீய சனதா, விசுவ

இந்து பரிசத், ஆர். எசு. எசு. போன்ற இயக்கங்கள் கொண்ட இராமர் கோயில சிக்கலுக்காகவுமே வி. பி. சிங் என்னும் நேர்மை மாந்தர் அரசு கவிழ்க்கப்பட்டது.

அந்நிலையில், மக்கள் சாய்காலை இழந்த பல ஊழல்கள் புரிந்த முன்னாள் தலைமையமைச்சர் இராசீவ், கரவான முறையில் வஞ்சக மனத்துடன் சாணக்கிய சூழ்ச்சி செய்து, குரங்கு தன் குட்டியின் வாலை விட்டு ஆழம் பார்ப்பதைப் போல, 54 பாராளுமன்ற உறுப்பினர்களையே ஆதரவாளராக்கிக் கொண்ட சந்திரசேகரை ஆட்சியில் ஏற்றி அவரைத தம் கைப்பாவையாக ஆக்கித் தம் விருப்பத்திற்கு ஆட்டி வைத்து அசாம், தமிழ்நாடு, ஆந்திரா, புதுச்சேரி முதலிய மாநில அரசுகளை அடியோடு குப்புறக் கவிழ்த்துக் குடியரசுத்தலைவராகிய பார்ப்பன வெங்கட்டராமனின் ஆட்சியை அமையச் செய்தார். அரசியலும், அதிகாரமும் வாய்ப்புகளும் பார்ப்பனியத்திற்கு இருக்கவேண்டும் என்று எண்ணுவதில் குடியரசுத்தலைவர் வெங்கடராமன் யாருக்குமே கீழானவரல்லர் என்பதைக் கடந்த இரண்டாண்டுகளாக நடந்த இந்திய ஆட்சி நாடகங்கள் தெள்ளத் தெளிவாகக் காட்டி விட்டன.

இவ்வாறான, சூழ்நிலையில், இரு காவலர்கள் வேவு பார்த்தனர் என்னும் நொண்டிச்சாக்கை அடிப்படையாக வைத்து, ஏறத்தாழ மூன்றரை மாதங்களே ஆட்சி செய்த சந்திரசேகரரையும் அண்மையில் கவிழ்த்து விட்டார், இந்த அரசியல் பத்தினியான இராசீவ்!

இந்த ஊழல் பேர்வழிக்குத் துணையாகவும் இவரின் கொள்ளைப் பணத்திற்குப் பங்காகவும், இங்கு, முன்பு மூப்பனார் கூட்டமும், இக்கால் செயலலிதா, வாழைப்பாடி, திண்டிவனங்கள் குமரி அனந்தன்கள் போன்றவர்கள் கூட்டமும் செயல்பட்டன; படுகின்றன. பணம் என்றால் வாய்திறந்து வயிறு கழுவுகின்ற இப்பிணந்தின்னிக் கழுகுகள் அரசியலில் ஏதோ பெரிய அறிஞர்கள் போலவும், தேசியப் பற்றுள்ளவர்கள் போலவும், கதை நாய்.கனுக் கேற்ற கட்டியங்காரன்களாக நாடகம் ஆடுகின்றனர்.

இவர்களும் இவர்களைப் போன்றவர்களும் பேசுவதெல்லாம் இந்திய ஒருமைப்பாடும் ஒற்றுமையும்! ஆனால் செய்வது எல்லாமே திருட்டுத்தனங்களும், பார்ப்பனியச் சூழ்ச்சிகளும் வேற்றுமைகளுமே! இந்தியாவில் அரசியலா நடைபெறுகிறது? பதவிச்சண்டைகளும், கள்ளப் பணங்களைப் பகிர்ந்து கொள்ளும் பகற் கொள்ளைகளுந் தாமே! விலக்காக ஓரிரண்டு இடங்களில் ஓரிரண்டு நல்ல செயல்கள் இருக்கலாம். ஆனால் அவற்றால் என்னபயன்?

முதலாளியமும் பார்ப்பனியமும் இணைந்து, சாதியத்தையும் மதவெறியையும் முன்னிறுத்தி, இவர்கள் செய்யும் அட்டுழியங்களுக்கும் அறக்கேடுகளுக்கும், காந்தியத்தையும், பார்ப்பனப் பாவலன் பாரதியையும் பின்னிறுத்தி நடத்தப் பெறும் இந்திய ஆட்சி ஒரு

கொடுங்கோல் ஆட்சி; கொள்ளையர் ஆட்சி; கொலைகாரர் ஆட்சி வல்லதிகார ஆட்சி என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

இந்தச் சூழ்நிலையில், இனிமேலும், இந்திய நடுவண் அரசுடன் தமிழின மக்கள் அரசியல் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது. எத்தனை வழக்காடினாலும், ஞாயம் பேசினாலும், வடநாட்டானும், ஆட்சித்தலைமையைப் பிடித்துக் கொண்டிருக்கும் பார்ப்பானும் தமிழினத்தை மதிக்கமாட்டார்கள். அவர்களுக்கு உரிமைகளை வழங்க மாட்டார்கள். இவர்களுக்காகவே இவர்களே எழுதி வைத்துக் கொண்டிருக்கும் சட்டங்களும் அதிகாரங்களும் அறமன்றங்களும் இவர்களுக்குத் துணையாகவே இருக்கும். இந்த நிலையை எந்த மாநில அரசாலும் என்றைக்கும் மாற்றவே முடியாது. இன்னும் குறிப்பாகத் தமிழ்நாட்டு அரசைக் கைப்பற்றும் எந்தக் கட்சி ஆட்சியும் கூட இவர்களைத் தட்டிக் கேட்கவோ, தங்களின் வாழ்வுரிமைகளைப் பெறுவதற்கோ முயற்சி செய்யாது; செய்ய முடியாது. இந்தியா உரிமை பெற்று நாற்பத்து நான்கு ஆண்டுகளாகியும், தமிழர்கள், திராவிடர்கள் என்று இம் மாநில ஆட்சியைக் கைப்பற்றிய எவரும் கூட அவ்வாறு செய்ததில்லை. செய்வதற்கு முயற்சி செய்வதும் கூட இல்லை.

இறுதியாக, தமிழக அரசுப் பொறுப்பைக் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஏற்றிருந்த கலைஞரின் தி. மு. க. அரசு கூட மாநில ஆட்சி என்ற அளவில்தான், வடநாட்டாருடனும் தமிழினத்தின் கழுத்தை அரிந்து கொண்டிருக்கும் பார்ப்பனருடனும் கூடிக்குலவி, தனிப்பட்ட தங்களின் நன்மைக்கும், பதவி நலத்திற்கும், அதிகார வாய்ப்பிற்குமாக ஆட்சி நடத்தியதே தவிர, தமிழுக்கென்றோ தமிழினத்தின் நிலையான அடிமை நீக்கத்திற்கென்றோ, தமிழ் நாட்டின் உரிமை மீட்சிக்கென்றோ எந்த ஒரு செயலையும் செய்ததில்லை. வள்ளுவர் கோட்டமும், பூம்புகார் அமைப்பும், கன்னியாகுமரியில் அமையவிருக்கும் திருவள்ளுவர் சிலையும், இலவயக் கல்வியும், சாரவுணவும், இலவய அரிசியும் வேட்டி சேலைக் கொடுப்பும் அரசியலும் அன்று; ஆட்சியியலும் அன்று; இனமீட்பும், உரிமை மீட்சியும் அல்ல! வெறும் ஏமாற்றும் கண்துடைப்புமே ஆகும். நாற்பது இலக்கம் உறுப்பினர்கள் உள்ள கட்சி எங்கள் கட்சி என்று பீற்றிக் கொள்ளும் தி. மு. க. பின்பற்றிகளுக்கும், ஏன் கலைஞர்க்குமே சொல்லிக் கொள்கிறோம்!

'கான் முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது'

என்னும் திருவள்ளுவப் பெருமானின் திருவாய் மொழியை நன்கு படித்திருப்பீர்கள். ஆனால், உணர்ந்திருக்க மாட்டீர்கள்; உணர்ந்திருந்தாலும் அதை வாழ்க்கையிலும் கடைப்பிடித்து உணர்த்தியிருக்க மாட்டீர்கள்! ஆட்சிச் செருக்கும், அறிவு

Scanned with CamScanner

அகம்பாவமும் உள்ள உங்களிடம் படைச்செருக்கும், வினைத் தூய்மையும் இருத்தல் அரிதினும் அரிது.

திருவள்ளுவர் பெருமானின் கருத்தை ஊரெல்லாம் முழக்குவீர்கள். அவர் திருவுருவச் சிலையையும் நாட்டுவீர்கள்! ஆனால் அவர் என்ன சொன்னார், எதற்குச் சொன்னார், ஏன் சொன்னார், எப்படிச் சொன்னார், எவருக்காகச் சொன்னார், என்கின்ற மெய்ப்பொருளை நீங்கள் அறிந்திருப்பதாக இதுவரை எங்கும் எப்பொழுதும் எதன் பொருட்டும் நீங்கள் காட்டவில்லை. உங்களிடம் உள்ள போலித்தனமான அறிவும், புரையோடிய உள்ளமும், புல்லிய செயல்களுமே உங்களை அவற்றினின்று வேறு பிரித்து வைத்திருக்கின்றன. உங்கள் முதுகில் நீங்களே தட்டிக் கொடுக்கவும் உங்களை நீங்களே மெச்சித்துக் கொள்ளவுந்தாம் நீங்கள் அறிவீர்கள். எனவே எந்த வாய்ப்பையும் நீங்கள் உங்களுக்காகத்தான் பயன்படுத்துவீர்களே தவிர, இம்மொழிக்காகவும், இனத்திற்காகவும், நாட்டிற்காகவும் பயன்படுத்த மாட்டீர்கள்.

இவ்வாறு நீங்கள் என்றுமே சிந்தித்துக் கூட பார்த்திருக்க மாட்டீர்கள். ஏனெனில் பிறர்க்கு உடலில் மட்டுந்தான் கொழுப்புப் படரும். ஆனால், கலைஞரே, உங்களுக்கு நீங்கள் மூச்சுயிர்க்கும் நெஞ்சாங் குலையிலும் கொழுப்பு! நீங்கள் பார்க்கின்ற கண்களிலும் கொழுப்பு! நீங்கள் சிந்திக்கின்ற மூளையிலும் கொழுப்பு படர்ந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள். கிடைத்த வாய்ப்புகளையெல்லாம் பறிகொடுத்து விட்டீர்கள்! இனி உங்கட்கு வெறும் வாய்ப் பூ தான்! இது நிற்க.

எனவே, தமிழர்களே! இனி எந்த அரசியல் கட்சியையோ, அரசியல் தலைமையையோ நம்ப வேண்டா. இனிமேலாகிலும், இந்திய அரசியலிலிருந்து பிரிந்து தனித்தமிழ்நாடு பெறுவதே நம் குறிக்கோளாக, முழு முயற்சியாக, இருத்தல் வேண்டும்.

ஆகவே, வருகின்ற, வந்துபோகின்ற தேர்தல் திருவிழாக்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டா. அதில் குதித்துக் கொம்மாளமிட்டுக் குளிர்காய விரும்பும் எவரையும் நீங்கள் நம்பவும் வேண்டா. அப்படி ஒருவேளை நீங்களும் தேர்தலில் ஈடுபட்டு, எவரையேனும் உங்கள் மனத்துக்கும் அறிவுக்கும் பிடித்தவர் ஒருவர்க்கு, நீங்கள் ஒப்போலையிட விரும்பினால், அவர் தனித்தமிழ் நாட்டுக் கொள்கையுடையவராக இருக்கட்டும்.

ஆமாம்! இந்தியக் கொடுங்கோல் சாதிமத வெறிகொண்ட, பார்ப்பனீய முதலாளிய வடநாட்டு அரசினின்று தமிழகத்தை மீட்டுத் தனி இறையாண்மை அரசமைப்பவரையே அவ்வாறு உறுதி கொடுப்பவரையே தேர்தலில் வெற்றி பெறச்செய்யுங்கள்!

(நன்றி : **தமிழ்நிலம்**. இதழெண் : 144)

திடம், திறம்!

செஞ்சொற்கதிரவன், சொல்லாய்வறிஞர். ப. அருளி—
தூயதமிழ் அகரமுதலி, அறிவியல் கலைச்சொல்
அகராதி—தொகுப்பாசிரியர்,
தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்.

துல்லியம் :

துல்—பொருந்துதல் கருத்துடைய தமிழின் வேர்ச்-
சொற்களில் ஒன்று.

துல்—துலம்—துல் + இயம்—துல்லியம்

துல்—துன் > துன்னு > —பொருந்து, செறி.
துன்னல்—தையல்
துன்னல்—சிதாஅர்' — (பொருந : 81)
'இழை வலந்த பல் துன்னத்து' —(புறம் : 136 : 2)

துல் > துள் > துண் > துணை—சேர்க்கை, ஒத்தல்.
துணை > துணைவு > துணைவன்—கணவன், காதலன்.
துணைவு + இ—துணைவி—மனைவி, இல்லாள்.
மனையோள் துணைவியாக'— (ஐங்குறு : 410 : 1—2)

துல் > துள் > திள் > திளை—நெருங்கு, கூடு, செறி.
திளை—தல்—திளைத்தல்—நெருங்குதல் (சூடா.)
(பொருதல்)
'ஈரெண்மர் திளைத்து வீழ்ந்தார்' — (சீவக : 3076.)

துல் > திள் > திண் + மை > திண்மை—திணுக்கம், உறுதி, வலிமை.
திண் + அம் > திண்ணம்—உறுதி, நித்தியம், நிச்சயம்,
இறுக்கம்.
திண் + அறிவு—திண்ணறிவு—செறிந்த திணுக்க அறிவு.
வலிய அறிவு.
திண் + அன் > திண்ணன்—வலியவன்.
திண்ணியர்—உறுதியானவர், மனவுறுதியர்ளர்.
திண்ணியர் ஆகப் பெறின்— (குறள் : 662)
திண் + அர் > திணர்—செறிவு.
திண் > திணி—செறிவு.
திணி + தல்—திணிதல்—செறிதல், இறுகுதல்.
'மண் திணிந்த நிலனும்' (புறம் : 2 : 1)
திண் > திண்ணை > திணை—திண்மையான நிலம்,
திண்ணிய மேட்டுநிலம்.
திணை—திண்ணை—கட்டப்பெற்ற திண்ணிய திண்டு.
மெழுகாப் புன்திணை. (அகம் : 167 : 16)

திள் + பு—திட்பு
ஒ. நோ : நள் + பு—நட்பு; பெள் + பு—பெட்டி.

திட்பு + அம்—திட்பம்—நெருக்கம், செறிவு, திணுக்கம், உறுதி
செறிவும் திண்மையும் செறிந்த மனவுரம்.

Scanned with CamScanner

திட்பம்—உறுதி, செறிவு.

'வினைத்திட்பம்...மனத்திட்பம்' (குறள்: 661,665, 670)

திள் + து—திட்டு.

ஒ. நோ: வள் + து—வட்டு; கள் + து—கட்டு

திட்டு—திண்ணிய மண்மேடு, ஆற்றிடைக்குறை சிறு குன்று.

திட்டு > திட்டாணி—மரத்தைச் சூழக் கட்டப்பெற்ற மேடை.

திட்டு > திட்டை—மண்மேடு, மேடு.

வார்மணல் அகல் திட்டை (பட்டினப் : 60)

திட்டையிடுதல்—பல் ஈறு தடித்தல்(யாழ்ப்பாண வழக்கு)

திட்டு + அம் > திட்டம்—உறுதிப்பாடு, வலிவு, கட்டமைப்பு.

திட்டு > திடு (ஒ. நோ : வட்டு > வடு; விட்டு > விடு)

திடு > திடல்—திண்ணிய மண்வெளி, அரங்கவெளி.

திடல் > திடர்—உறுதி, வலி.

திடர் > திடார் > திடாரி—வலியவன் (யாழ்ப்பாண வழக்கு)

திடார் + இகம் — திடாரிகம் > திடாரிக்கம்—வலிமை.

திடு + அம் > திடம்—செறிவு, திணிவு, உறுதி, நிலை வலிமை, ஆற்றல்.

டகர தகரங்கள், ரகர றகரங்களாகத் திரிபேற்பதானது, மொழியியற்பட்ட ஒலியியலில் பரவலான நேர்வு உடையதாகும்.

திடம் > திரம் > திறம் என்றவாறு திரிந்து, செறிவு, வலிமை, ஆற்றல்—போலும் கருத்துநிலைகளை விளர விட்டுக் கொண்டு, வளர்வெய்தியதும், இத்தகு போங்கு முறையிலேயேயாகும்.

தமிழ்ச் சொற்களினின்று, சமற்கிருதம் தான் திரிபுறுத்திக் கடன் கொண்ட அமைப்புகளில் ரகர இனவொலி நுழைப்பும் ஒரு பாங்கினதாகும்.

ஒப்புநோக்கு :

படி > ப்ரதி, மெது > ம்ருது, மதங்கம் > ம்ருதங்க,

தோணி > த்ரோணி, பவளம் > ப்ரவாள, நடம் > ந்ருத்த

—இவ்வகைப் போங்கிலேயே திடம் என்னும் செந்தமிழ்ச் சொல்லை, சமற்கிருதம் (திடம் >)த்ருத என்றவாறு திரித்தேற்றது.

திடம் என்னும் தமிழ்ச் சொல்லின் சமற்கிருதத் திரிபில்

வேறுபுடை :

திடம் >(Skt) Dridha--Hard, strong, Violent, mighty.

பயன்படுத்தங்கள் :

Dridha— Kantaka--hard thorned
Dridha—Kanda—strong—stemmed
Dridha—taru—Strong tree
Dridha—Dhanus—having strong bow

Dridha—Phala—having hard Fruit, the cocoa—nut tree.

Dridha—Rashtra —திட அரசன்.
Dridha—Kara.-strengthening

Drida—என்னும் திரிசொல்லின் கொடுந்திரிபுகள்.
(skt) Dridha > Dhrishta—bold, audacious
Dhrishta—buddhi—bold—minded
Dhrishta—Vadin—speaking boldly
Dhrishtatva—boldness, courage
Dhrishti—bold

திடம் > திரம் > திறம்—உறுதி, திண்ணிலை,வலிமை, ஆற்றல்,வீறு.
திறம் > திறன் > வினையாற்றல், செயலாற்றல், வலிமை.
திறல்—வலி, ஆற்றல்.

ஒ. நோ : அருந்திறல் கடவுள் வாழ்த்தி. (பெரும்பாண்:391)
கடுந்திறல் வேனில் (பெரும்பான் : 3)
நச். உரை : கடுந்திறல்—கடிய வலிமையுடைய.
பிற வடபால் மொழிகளில் இச்சொல்லின் பசுமைத்திரிபுகள்.

Pali : Thira. Prakrit : thira. Nepali : thiro.
Panjabi : thir-- Kumauni : thiro.Bengali : thira
Maithili : thir--Bhojpuri : thir.old. Awadhi: thira.

திறம் என்னும் சொல் சமற்கிருதத்தில் முதலுயிர் நீட்டமாக வேறுபுடையில் ஒலிப்புற்றுப் பயன்பாடு கொண்டது.

திறம் > (Skt) Dira—firm, brave, energetic, courageous.

பிற வழக்குகள் :

Dhira—Skanda—strong-Shouldered
Dira—Skilful, wise.

தைரியம்' என்னும் சமற்கிருத வடிவம் இம் மேற்கண்ட தமிழ்வழித் திரிபுச்சொல்லினின்றே ஆக்கப் பெற்றதாகும்.

Dhira > (Skt) Dhairya—courage, firmness

சமற்கிருத ஆக்க நெறியில், இகர ஈகாரங்கள், ஐகார ஒலி, வடிவெய்துவது இயல்பு.

ஒ.நோ. :chitra > eaitra; Vidya > Vaidya; Vibhava > Vaibhava

இவை மேலும் விரிக்கின் பெருகும். ஆக தீரம், தீரன், தைரியம், ஸ்திரம் ஆகிய சமற்கிருத வடிவுகளின் மூலமாகவும் அடியாகவும், திடம், திறம் ஆகிய செந்தமிழ்ச் சொற்களே உள்ளன. இன்னவாறே ஏனைய பெரும்பான்மையும் உள. அவை அவ்வக்கால் விளங்க விளக்கப் பெறும். (அடிப்படை : நூல் : இவை தமிழல்ல)

Scanned with CamScanner

பாவேந்தர் பாராட்டரங்கம்

முத்தமிழ் மன்றம், ஊரகம் (BHEL) திருச்சி.
(பாவேந்தர் நூற்றாண்டு விழா-22-1-91)

பேரன்பும் பெருமதிப்பும் கொண்ட பெரியோரே!
சீரன்பு கொண்டிலங்கும் செந்தமிழத் தாய்மாரே!
சாகாத் தமிழ்ப்பண்பு கொண்ட நறுஞ் சான்றோரே!
ஏகாத் தமிழ் வீரம் இலங்கும் இளைஞர்களே!
உங்கள் அனைவர்க்கும் உளங்கனிந்த நல்வணக்கம்!

திங்கள், பரிதி திகழ்கின்ற காலமட்டும்
எங்கள் குலவிளக்காய் இளையோர் தம் கைவிளக்காய்
மங்காத் தமிழ்வளர்த்து மாயா இனம் வளர்த்துப்
பொங்குகின்ற நல்லுணர்வைப் புதுக்கிய நம் பாவேந்தர்
நூற்றாண்டு விழாப்பொழுதில் நடக்கும் இந் நிகழ்ச்சியினைப்
போற்றி மகிழ்கின்றேன்; பொழிகின்ற நல்லுரையைக்
கேட்டுப் பெருவீறு கிளர்க்கின்ற நோக்கத்தில்
வீட்டுப் பணிமறந்து வீற்றிருக்கும் உங்களுடை
நல்லுணர்வை—நல்வரவை—நன்றியுடன் வாழ்த்துகின்றேன்
வெல்லுணர்வாய் அவ்வுணர்வு விளங்கிடவும் வேண்டு-
கின்றேன்;

இவ் விழாவில் உங்களுடன் என் கருத்தை வைப்பதற்கு
இவ்வூ ரகத்தில் இருக்கும் மிகு மின் நிலைய—
முத்தமிழ் மன்றத்தார் முழுவாய்ப்பைத் தந்துள்ளார்;
அத்தமிழ் மன்றிற்கும் அகங்கனிந்த நன்றி சொல்வேன்!
செத்தழியும் நம் மினத்துச் செய்தியினைப் பேசாமல்
ஒத்தூதி ஒத்தூதி உருக்குலைந்து போயிருக்கும்—
போலி அரசியலை—பொய்ம்மைப் பொருளியலைக்
காலித் தனத்தின் கயமை மிகு கலையியலைக்
கூறுவதால் என்னபயன்? கூத்தாட்டக் காரரெல்லாம்
ஏறுகின்ற ஆட்சி இயங்குகின்ற காலமிது!

இக் கால கட்டத்தில் இருக்கின்ற நல்லோர்கள்—
இக் காலுக் கோரிருவ ராய்த் தெரியும் நற்றமிழர்—
அங்கொன்றும் இங் கொன்று மாய், அழிந்து மடியாமல்
தங்கும் இனவுணர்வு, தாழாத நாட்டுணர்வு—
நல்லதமிழ்ப் பற்றெல்லாம்—நசிந்துபோ காதிருக்கும்
வல்லதமிழ்ச் சான்றோரும் வாழ்ந்துவரு கின்றார்கள்
என்பதற்கோர் சான்றே ஆம் இம் மன்ற விழா—என்க!

தின்பதற்கும் துய்ப்பதற்கு மே, தமிழர் திரிகின்றார்!
மன்பதைக்கு நலஞ்சேர்க்க மாந்தர் உழைக்காமல்—
விலங்குகளா வந்துழைக்கும்? நாகரிக வேகத்தில்
கலங்குகின்ற மக்களிடம் காசடிக்கும் கூட்டங்கள்—
ஏமாற்றி வாழ்கின்ற எத்தர்களின் கும்பல்கள்—
தாமாற்றும் கயமைக்கெலாம் தமிழை முன் வைத்துப்

Scanned with CamScanner

பெயரும் பணமும் பெறமுயலும் பீற்றல்கள்—
அயருகின்ற மக்களிடம் ஆர்ப்பரித்து, விளம்பரத்தால்
தேர்தலில் நின்றுவெற்றி தேடும் அரசியல்கள்—
சேர்கின்ற கூட்டத்தில் மதத்தைச் சிக்கவைத்தே
எல்லா நன் மக்களேயும் இளித்தவா யர்களாக்கும்
மத வெறியர் கூத்துகள்! மாதலைவர் பெரியாரால்
புதை குழிக்குப் போய்விட்ட சாதிகளைப் புறந்தோண்டிக்
கதை செய்து சாதிகளேக் காசாக்கும் கொடுமைகள்—

—இவ்வாறுத் தமிழினத்தை இழுபறிக்கே ஆளாக்கிக்
கவ்வி யிழுத்துக் கைவேறு கால்வேறுய்ச்
செய்துவரும் காலத்தில் சிக்கியிருக் கின்றேம், நாம்!
எய்திவரும் துயுருக்கோர் எல்லையில்லை, அன்பர்களே!

இந்த நிலைகளெல்லாம் எப்படித்தான் நம்மினத்தை
வந்து கவ்வினவோ? என்று கலங்குகின்றீர்!
வரலாறு தெரியாத வகையினர்தாம் இவ்வாறு
நிரல்நிறையாய் எண்ணத் தெரியாமல் நின்றழுவார்!

உண்மை தெரிந்தால் ஊமையராய் வீற்றிருக்கார்!
மண்மேல் தமிழஇனம் மண்டியிட்டு வாழ்ந்ததில்லை!
எத்திக்கும் சென்றே ஏற்றம் விளைவித்த
முத்தமிழர் வரலாறு முளேக்கும்போ தே, வீரம்
கொப்புளித்துப் பொங்கும் குலைநடுங்கும் வரலாறும்!

தப்புத் தவறுக நாம்படிக்கும் வரலாற்றில்
இராவணற்கும் தாழ்ச்சி; இராமனுக்கோ ஏற்றம்!
இரணியனுக் கிழிவு! ஏற்றம், பிரக லாதனுக்கு
மாவலிக்கு வீழ்ச்சி! மறையோனுக் குயரெழுச்சி!

தாவி இமயமலை தலைமேல் புலிக்கொடியும்
விற்கொடியும் பொறித்த வீரவர லாறு—எங்கே?
கற்குடைந்து தூக்கிவந்த கனகவிசை யர்—எங்கே?

ஆரியர்கள் தங்கட்கே ஆக்கந் தரும்வகையில்
வீரத்தமிழ் வரலாற்றை வெறும்வரலா ருக்கிவிட்டார்
இந்த நிலைதெரிந்தால் ஏமாறி இருக்கோம், நாம்!
சொந்த இனத்தைச் சோற்றுக்குக் காட்டிக்கொடோம்!
வீடணர்கள் இன்னும் வெற்றியுடன் வாழார்கள்!
பீடழித்த பிரகலா தன்களிங்குப் பிறவார்கள்!

என்னசெய்வ தினிநாம்? எண்ணிப்பார்த் திடல்வேண்டும்
சொன்னசொற் கள்கோடி! சொத்தைகளாய்ப்
போயினவே!

எத்தனைச் சான்றேர்கள் இருந்தார்கள் நம்மிடையில்!
எத்தனையோ பெரும்புலவர் இருந்து மறைந்துவிட்டார்!
வள்ளுவர்போல் இன்னெருவர் வருவாரா இனி, இங்கே?
தெள்ளுதமிழ் இளங்கோபோல் சாத்தன்போல் திகழ்வாரா?

Scanned with CamScanner

பெரியார்போல் இன்னொருவர் பிறந்தினிமேல் வருவாரா?
அரியார்கள் எல்லாரும் அன்றிருந்து மாய்ந்துவிட்டார்!

இனிமேலும் நமையுயர்த்த எவரொருவர் வந்திடுவார்?
முனியாமல்—ஒன்றும் முணுமுணுப்புக் கொள்ளாமல்
சிந்தித்துப் பாருங்கள்! என்னசெய்யப் போகின்றோம்?
முந்தித் தவமிருந்து முத்தமிழ்த்தாய் பெற்றெடுத்து
வந்துசென்றோர் எத்தனைப்பேர் வரலாற்றைப் பாருங்கள்!
நொந்துநொந்து சாவதல்லால் நுடங்கிவிட்ட
நம்மினத்தைத்

தூக்கி நிறுத்திட, யார் தோன்றிவிடப் போகின்றார்?
மூக்கில் விரல் நிறுத்தி முடிவாக எண்ணிடுங்கள்!

கடந்தகா லத்துக் கதையினையோர் கணநேரம்—
நடந்துவந்த வரலாற்றை—நடக்கின்ற நிகழ்ச்சிகளோ
டொருநிமையம் நன்றாக ஒப்பிட்டுப் பாருங்கள்!
தெருநாய்க்கும் உரிமையுண்டு! திரிகின்ற பறவைக்கெலாம்
வாழ்வுரிமை உண்டு! என்றும் வாழ்விலவை தாழ்ந்ததில்லை!
வீழ்ந்துவிட்ட தமிழரினம் விழிப்பதுதான் என்றைக்கோ?

ஆழமாய்ச் சிந்தியுங்கள்! அன்றிருந்த நிலைகளென்ன?
வாழாமல் நந்தமிழர் வாழ்ந்துவரும் நிலைகளென்ன?

சிந்தித்துச் சிந்தித்து, ஓர் சிறந்த முடிவெடுங்கள்!
வெந்து மடிந்து நாம் வீணாகக் கூடாது!

இவ்விடத்தில் முன்னர்நாம் இழந்த வரலாற்றை
செவ்வையாய் நொடிப்பொழுது சிந்தித்துப்
பார்த்திடுவோம்!

நாவேந்தும் செந்தமிழின் நல்லினத்தார் இடையினிலே—
மூவேந்தர் காலத்தில்—முழுவதுமாய் அடிமையுற்றுச்
சாவேந்தி வாழ்ந்திருந்து ஆரியத்தால் தந்துவந்த
ஈவேந்திக் கொண்டிருந்தார்; இருபதாம் நூற்றாண்டில்
காவேந்த ராய்வந்தார், நம்பெரியார்! அவர் வழியில்
பாவேந்தர் தலைநின்றார்! பாட்டாலே பெரும்புரட்சி
செய்திடவும் சீர்த்தெழுந்தார்; செத்திருந்த தமிழினத்தார்
உய்திபெற் றெழுந்திடவே உணர்ச்சிப் பிழம்பாகச்
செந்தமிழை வெந்தணலில் தோய்த்தெடுத்தே எந்தமிழர்
முந்தி யிழந்திருந்த மொய்ம்புகளை நினைவூட்டி,

'நல்லுயிர் உடம்பு செந்தமிழ் மூன்றும்
நான் நான் நான்' —என்று ஆர்ப்பரித்து வீறார்ந்து,
"தென்னாட்டின் நிலைநினைத்தால் வெடிக்கும் உள்ளம்;
செந்தமிழர் நிலைநினைத்தால் துடிக்கும் நெஞ்சம்"
"ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ
அல்லல்கள் வரின் ஏற்பேன்;
ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு
உவப்புடன் நான் சேர்ப்பேன்"

Scanned with CamScanner

என்று மொழிந்து எழுந்துநின்றே ஆர்ப்பரித்தார்;
ஒன்றுபட் டியங்கிடவே தமிழ்மொழியும் உண்டென்றார்;
மொழியை முன்வைத்து முழுஇனத்தை இணைத்திடுமோர்
வழியினைக் கண்டுசொன்னார்! வரம்பதுவே என்று சொன்னார்!

"மொழியென்றால் உயிரின் நரம்பு—நம்
முத்தமிழ் மொழியோ தமிழர் வரம்பு"— என
மொழிவரம்பு கட்டியராய், மூட்டிவிட்டார் செந்தணலை!
விழிக்கூர்மை காட்டி வெளியார்க்குச் செய்தி சொன்னார்!

"செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க
நந்தமிழர் உள்ளத்தில் வையம் நடுநடுங்கும்
வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்ததெனக்
குந்திக் குரலெடுத்துக் கூவாய்க் கருங்குயிலே"
—என்றபடி கருங்குயிலை, எச்சரிக்கை செய்யச்சொன்னார்!
அன்றையவர் தொடங்கிவைத்த அழகுதமிழ் ஏட்டிற்குக்
'குயில்' என்று பெயர்வைத்துக் குவலயத்தில் கூவ
விட்டார்!

"எரிகின்ற எங்களின் நெஞ்சுமேல் ஆணை!
இனியெங்கள் ஆட்சியிந் நாட்டிலே"—என முழங்கி,
"இருக்கும் நிலைமாற்ற ஒரு புரட்சிமனப் பான்மை
ஏற்படுத்தல் கடன்" என்று எழுத்தாளர்க் கெல்லாம்
கடனுரைத்து அன்னவர்க்குக் கருத்தும் தொடுத்-
துரைத்தார்

"உரம்பெய்த செந்தமிழுக் கொன்றிங்கு
நேர்ந்ததெனு உரைக்கக் கேட்டால்,
நரம்பெல்லாம் இரும்பாகி, நனவெல்லாம்
உணர்வாகி, நண்ணி டாரோ"
—என்றவா றெந்தமிழர் என்புகளில் நரம்புகளில்
நின்றிருந்த நல்லுணர்வில் நெருப்புணர்வை மூட்டி-
விட்டார்!

தூங்கிக் கிடக்கின்ற தமிழர் தொளைகளிலே
நீங்காமல் கயிறுதிரிக் கின்றநெடுங் கூட்டத்தின்
முன்னர் இளைஞர்களை முடுக்கிவிட்டே எழச்சொன்னார்!
பின்னர் வரும்வரிகள் பேரரிமாச் சீற்றமன்றோ?

"வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!
கையிருப்பைக் காட்ட எழுந்திரு!
குறிக்கும் உன் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கொணுக் கடல்போல் மாப்பகை மேல்விடு!
நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திடு!
பொன் மொழிக்கு நீ புதுமை ஏற்றுவாய்!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!
செந்தமிழ்ச் சொல்லால் செயலால்
தடம்பெருந் தோளால் தொடங்குக பணியை"!

—பாவேந்தர் பணிக்குப் பைந்தமிழே கைக்கருவி!
நாவூறும் செந்தமிழால் நற்றமிழர் வாழ்வுவரும்!
என்றே உணர்த்த, அவர் எழிற்றமிழை முன்வைத்தே
ஒன்றுயித் தமிழினமும் உறக்கத்தை விட்டெழவே,
பல்லா யிரக்கணக்கில் பாடல்களை முழக்கிநின்றார்!
எல்லாமும் எடுத்தியம்பல் இயலாது தோழர்களே!

திசைமாறிச் செல்லும் இளைஞர்களைத் திசைதிருப்பப்
பிசைந்தெடுத்த வீரத்தில் பைந்தமிழைத் தான்கலந்து
வீறு முழக்கிநின்றார் வெந்தணலைச் சொல்லாக்கி!
பீறி அடிக்கின்ற எரிக்குழம்பைப் பாருங்கள்:

"...சிறுத்தையே! வெளியில் வா!
எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலி எனச் செயல் செய்யப் புறப்படு வெளியில்!
சிங்க இளைஞனே திருப்புமுகம்! திற விழி!
இங்கு உன் நாட்டுக்கு இழிகழுதை ஆட்சியா?
கைவிரித்து வந்த கயவர் நம்மிடைப்
பொய் விரித்து நம் புலன்கள் மறைத்துத்
தமிழுக்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி,
நமக்குள உரிமை, தமக்கென்பார்,எனில்
வழிவழி வந்த உன் மறத்தனம் எங்கே?
மொழிப்பற் றெங்கே? விழிப்புற்று எழுக!"

"மனிதரில் நீயும்ஓர் மனிதன்; மண்ணன்று;
இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!
தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு!
மீசையை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!
நகைப்பை முழக்கு! நடத்து உலகத்தை!
இது உன் வீடு!" —

பாவேந்தர் பற்றவைத்த பைந்தமிழத் தணல்வரிகள்!
ஏவுகின்ற கட்டளைகள்! எரிபந்தக் கருத்துகள்!

குகைக்குள்ளே தூங்கிக் கொண்டிருக்கும் சிறுத்தைகளை
பகைக்கெதிராய் வந்துநிற்க பதைபதைத்தே எழுப்புகின்றார்!

சிறுத்தைப் புலிகளைச் சீண்டி எழுப்பிவிட்ட
திறத்தைப் புரிந்துகொண்ட திலவுப் புலிகளெல்லாம்
இலங்கையிலே ஆர்த்தெழுந்தே ஏறுநடைபோடுவதைக்
கலங்கியே ஓடிவந்த காவல் படையிடத்தில்
கேட்டால் தெரிந்துவிடும்! கிறுக்குப் பிடித்திருக்கும்
வீட்டிலுள்ள பூனைகட்கு வீரம் விளங்கிடுமா?
வாழப்பா டிக்கும் வாயாடி நடிகைக்கும்
கூழுக்குக் கும்பிடும் கூனிநிற்கும் தலைவர்க்கும்
எங்கே விளங்கிவிடும்? எப்படித்தான் புரிந்துவிடும்?
சங்கே முழங்கென்று பாவேந்தர் சாற்றுகின்றார்:

''எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றுதல் கண்டே!''
பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு'' என்றார்!

''சீர்த்தியால் அறத்தால் செழுமையால் வையப்
போர்த்திறத்தால் இயற்கை புனைந்த ஓர் உயிர்'' அவர்!
''எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
தனையீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கும் என்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாள்''— என்றே
மெத்த வுணர்ந்துரைத்த மேதையவர்; வீரரவர்!

செயலினையும் மூச்சினையும் செந்தமிழுக் கியக்கியநல்
வயவரவர்! வண்டமிழ்க்கு வாழ்வளித்த வள்ளலவர்!

நைந்தது தமிழென்றால் நைந்ததுஅவர் வாழ்வென்றார்!
உய்ந்தது தமிழென்றால் உய்ந்ததவர் உயிரென்றார்!

—இவ்வாறு தம்முயிரை எழில்தமிழோ டிணைத்தபடி
ஒவ்வாத பதவிக்கும் பணத்துக்கும் உழலாமல்
தமிழாக வே, பிறந்து, தமிழாக வே, வாழ்ந்த
தமிழ்ப்புலவர் அவர்போலத் தமிழகத்து வரலாற்றில்
எந்த ஒரு புலவர் எப்பொழுது வாழ்ந்து சென்றார்?
சிந்தித்துப் பாருங்கள்! சிந்தனைக்கும் ஒருவருண்டா?

அவர் கனவு ஒன்றிரண்டா? அவர்விழிப்பு தமிழ்விழிப்பு!
அவர் தூக்கம் கூட அழகுதமிழ்த் தூக்கமன்றோ?
ஊக்கத்தால் மிகையுணர்வால் உரைக்கவில்லை;
அன்பர்களே!
மாக்களைப்போல் நாம் உறங்கும் வேளையிலே உளறுகின்றோம்;
பாக்களெல்லாம் தமிழ்கொழிக்கும் பாவேந்தர் கூறுகின்றார்!
''தூக்கத்தில் பிதற்றினாலும் தூய்தமிழ் பிதற்றும் என்வாய்''
நாமும் இது போல மெச்சுதற்குப் பாடிடலாம்!
ஊமையனை மூங்கையனை உளறுவா யனையெல்லாம்
கவியரசர், பெருங்கவிக்கோ, கவிவாணர்—என்றபடி
ஆவி வருந்திடவே அழைக்கின்ற காலமிது!

நொந்து நொந்து வருந்திப்பன் னூறாண்டுத் தவமிருந்து
செந்தமிழ்த்தாய் பெற்ற செழும்பிள்ளை, பாவேந்தர்!

பாராட்டுக் காக,இப் பாட்டரங்கத் திற்காகச்
சீராட்டுஞ் சொற்களிலே செப்பவில்லை நண்பர்களே!

உண்மை உரைக்கின்றேன்; தமிழை உயிரென்றும்
கண்ணின் மணியென்றும் காக்கின்ற தாயென்றும்
சொன்ன புலவனெவன்?
— (காதலியைத் தான் சொல்வான்?)
— சொல்லியவன் முன்னரில்லை!

பின்னொருவன் இருப்பானேல்—பாவேந்தைப் பின்பற்றி
வயிற்றுப் பிழைப்புக்கு—வாய் வீச்சாய் நம்மிடையில்
கயிற்றைத் திரித்திருப்பான்! காலம் விடைசொல்லும்!

கன்னித் தமிழ்த்தாயைக் கற்பழிக்கும் கயவனெல்லாம்
மின்னித் திரிகின்ற காலமிது! மிகக்கொடுமை!

பாவேந்தர் கதறியவை பழிகாரர்க் கெங்குஉறைக்கும்!
கூவிக்கூவி, அழுதார்! கொஞ்சம் நினைத்தோமா?

"அமுதும் உன் தமிழினை உயிரென ஓம்பு!
காணும் பிறமொழிகளோ, வெறும் வேம்பு!
நமையெலாம் வடமொழி தூக்கிடும் தாம்பு?
நம்உரிமைதனைக் கடித்தது அப் பாம்பு!

தமிழனே! இதுகேளாய்! — உன்பால்
சாற்ற நினைத்தேன் பல நாளாய்!
தமிழனே! இதுகேளாய்!

வந்தவர் வஞ்சகர் தமிழால் செழித்தார்!
வாழ்வினில் உயர்ந்தபின் தமிழையே பழித்தார்!
நம்செயல் ஒழுக்கங்கள் பற்பல அழித்தார்!
நாமுணர்ந்தோம் இந்நாள் அவர்அஞ்சி விழித்தார்!
தமிழனே! இதுகேளாய்!

பாவேந்தர் நம்மை விழிப்பித்த பாடலிது!
சாவேந்தும் போதும் தமிழ்வளர்த்துச் சாகாதார்!

வறுமையிலே வெந்து நொந்து வாடியபோதும்கூட
வெறுமைப் பயல்களைப்போல் வீணரைப்போல் இல்லாமல்

நிமிர்ந்துநின்றே வீழ்ந்த நெடுங்குன்றம் பாவேந்தர்!
திமிர்ந்துரைத்த அன்னவர்தம் பாட்டடிகள் தீர்வுசொல்லும்!

"தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை-என்
தாய் தடுத்தாலும் விடேன்!
எமைநத்து வாய்-என எதிரிகள் கோடி
இட்டழைத் தாலும் தொடேன்!"

எதிரியிடும் எச்சிலுக்கே எந்தமிழை விலைபோக்கும்
உதிரிப் புலவரிடை—ஒண்டமிழ்செய் பாவேந்தர்—
தமக்கு விழாவெடுக்கும் தகுதிநமக் குண்டென்று
நமக்குப் படவில்லை; நம் உரைக்கு வருந்தாதீர்!

அவர்கண்ட கனவென்ன? அவர் கொண்ட கொள்கையென்ன?
இவர்க்கு விழா எடுப்பதெனில் இவை முடிக்க வேண்டாமா?
நாவேந்தர் சொன்னவற்றை நாம்செய்ய வேண்டாமா?
பாவேந்தர் பகர்கின்றார்! பாட்டடிகள் கேளுங்கள்:

"என்தமிழ் அன்னை துன்பம் நீங்கித்
தூய்மை எய்தித் துலங்குதல் காண்பேன்!
என்தமிழ் நாடு தன்னாட்சி பெற்றுத்

துலங்கிடுதல் காண்பேன்! — தமிழர்
நலங்காண் பேன், நான் நானில மீதிலே!''

என்றைக்கிந்தப் பாட்டடிகள் இலக்குநிறை வேறிடுமோ
அன்றைக்குத்தான் நாமவர்க்கே ஆர்க்கும் விழாவெடுக்க
வேண்டுமென்பேன்! இஃதென் வேண்டுகோள் மட்டுமன்று!

மூண்டெழுத்த புரட்சிப் பாவேந்தர் முழக்கமன்றோ?
அதற்குநாம் முதற்கண் அணியமாக வேண்டாமா?
இதற்குமொரு தீர்வைப் பாவேந்தர் எடுத்துரைப்பார்:

சாதி ஒழித்தோமா? இல்லையே! நமக்குள்நாம்
மோதிக் கொண்டன்றோ மூண்டழியப் பார்க்கின்றோம்!
நல்லதமிழ் வளர்த்தோமா? இல்லையே! நாமின்றும்
தில்லியனுக் கஞ்சியன்றோ இந்தியிலே இளிக்கின்றோம்!
கொச்சைத் தமிழில் குரலெடுப்பாய்ப் பேசிவிட்டுப்
பச்சைத் தமிழனென்றும் பைந்தமிழில் அறிஞரென்றும்
உச்சி குளிர்கின்றோம்! ஊரைஏ மாற்றுகின்றோம்!
மெச்சிடவே பாவேந்தர் செந்தமிழர் மேன்மைக்குக்
காட்டும்வழி தானென்ன? கவனிக்க வேண்டாமா?
நீட்டி முழக்கவில்லை; நின்றிதனைக் கேளுங்கள்!

''சாதி ஒழித்திடல் ஒன்று!—நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று!
பாதியை நாடு மறந்தால்—மற்ற
பாதி துலங்குவ தில்லை!

இந்த நினைவுகளோ டிங்குநிகழ் பாட்டரங்கை
வந்திருக்கும் சான்றோரே! வணங்கத்தகு தாய்மாரே!
அமைந்திருந்து கேளுங்கள்! அருந்தமிழ்செய் பாவலர்கள்!
நமைஉயர்த்திப் போயிருக்கும் நற்றமிழப் பாவேந்தர்—

''பைந்தமிழ்த் தேர்ப்பாகன்'' என்றொருவர் பாடுகின்றார்!
''நீடுதுயில் நீக்கிடவே பாடிவந்த நிலா'' வென்றே
பாடுவார் மற்றொருவர்; பாவேந்தர் பாடல்களில்

''கற்பனை ஊற்றைக், 'கருத்தின் புதையல்களைச்''
சொற்படுத்திக் காட்டுகின்றார், சொல்வல்லார் வேறொருவர்!

'படருகின்ற சாதிக்கு, நம் பாவேந்தர் மருந்தெடுத்துத்
தடவ வருகின்றார் தக்கவொரு பாப்புலவர்!

'புரட்சிப் புயலென்றும் புதுமைப் புனலென்றும்'
திரட்சித் தமிழ்ச்சொற்கள் தேர்ந்தெடுத்துக் கூறுதிறன்
வல்லஒரு சொல்லாய்வை வாழ்வாய் அமைத்துக் கொண்ட
நல்லஒரு பாப்புலவர் நாட்டிடவும் வந்துள்ளார்!

அன்னவரின் பாடல்களை அமர்ந்து அமைந்திருந்து
உன்னிப்பாய்ச் செவிமடுக்க உங்களைநான் வேண்டுகிறேன்!
(தொடர்ச்சி : 2[illegible]-ஆம் பக்கம்)

தென்மொழி அன்பர்களே! உங்களை வரலாற்றில் இணைத்துக் கொள்ளுங்கள்!

பேரன்பின் இனிய தமிழ் நெஞ்சங்களே!

'தென்மொழி ஓர் இதழன்று; ஓர் இயக்கம்' என்று இதன் தொடக்கத்திலேயே எழுதியிருந்தோம். இஃது ஓர் இயக்கம் மட்டுமன்று; இஃது ஒரு வரலாறு! ஆம்! தூய தமிழ் வரலாறு. மறைமலையடிகள் காலத்தில் கருத்தாக மலர்ந்த தூயதமிழ் நெறியைப் பாவாணர் காலத்தில் ஒரு முயற்சியாக்கி, இதனை இன்று பெரும் இயக்கமாக, வரலாறாக வளர்த்து வடிவமாக்கிக் காட்டிய பெருமை தென்மொழிக்கு உண்டு.

இந்த வரலாற்றில் தென்மொழி படிக்கும் அனைவர்க்கும் பங்குண்டு; பெருமையுமுண்டு. தமிழகத்தில் நடைபெற்று வரும் பிற இதழ்கள், தாளிகைகள் போல் அல்லாமல், மொழிநடையிலும், இன முன்னேற்றத்திலும், தனித்தமிழ் நாட்டு விடுதலை முயற்சியிலும் தென்மொழி அணி,முதல் அணி! தலைப் படை! அஃதாவது தூசிப் படை!

இப் படையில் தொடக்கத்தில் பங்கேற்றவர்கள், இடையில் இணைந்து கொண்டவர்கள், இக்கால் தொடர்ந்து வருபவர்கள் எனப் பலர் உளர். தொடக்கத்தில் முடுக்கமாக நடை தொடங்கி, இடையில் சந்துகளிலும், பொந்துகளிலும் தங்களை ஒதுக்கிக் கொண்டவர்கள், கை நெகிழ்த்தவர்கள், இதன் மேல் ஏதாவது பொருந்தாமலும் பொய்யாகவும் காரணங்காட்டி விலகி நின்றவர்களும் பலர் உளர். இனி, தொடக்கத்திலிருந்து, பல்வேறு இழப்புகளையும், அழுத்தங்களையும், சுமைகளையும், இழிவு சிறப்புகளையும், புரளி பூசல்களையும் பொருட்படுத்தாமல் இன்றுவரை, இதனோடு இணைந்து வீறுநடைபோடுகிறவர்களும் பலர் உளர். இவ்வகையினர் எல்லாரும் இத் தாய்த் தமிழ்நிலத்தில் மட்டுமல்லாமல், ஐரோப்பிய நாடுகளிலும், கிழக்காசிய நாடுகளிலும், அமெரிக்காவிலும், இலங்கையிலும், பிற வேறு இந்திய மாநிலங்களிலும் பரவலாக வாழ்ந்து கொண்டுள்ளனர்.

இவர்களில் நேரடியாக இதன் உழைப்பிலும் ஊக்கத்திலும் பங்கு கொண்டவர்கள் பலர். மறைமுகமாக இதற்கு நீரும் எருவும் இட்ட நல்லுளத்தவர்கள் சிலர். இவர்களில் பலர் தென்மொழியைத் தொடர்ந்து படிப்பவர்கள்; பலர் இதனை வாங்கிப் பலர்க்கும் விற்றுப் பயன் தந்தவர்கள்; சிலர் வணிகர்கள்; இன்னும் சிலர் இதன் கொள்கை கோட்பாடுகளில் இணைந்து நின்று இயங்குகின்ற பேராளர்கள்; படி நிகராளியர்கள்; செயல் மறவர்கள்.

இப்படியானவர்கள், எப்படி எப்படி, எந்தெந்தக் கால கட்டங்களில், எங்கெங்கிருந்து இதன் ஏறு நடையுடன் இணைந்து நடக்கத் தொடங்கினர்கள் என்பது பல வரலாறுகளை உள்ளடக்-

கிய அருஞ்செய்தி. இவ் வரலாறுகளெல்லாம் தென்மொழியின் பெருமை வரலாற்றில் உள்ளடங்க வேண்டிய உணர்வுப்பக்கங்கள்

எனவே, இவ் வறிக்கையைக் காணும் தென்மொழி அன்பர்கள் ஒவ்வொருவரும், கீழே குறிப்பிடப் பெறும் வகையில் அவரவர்களின் தென்மொழி ஈடுபாடுகளையும், அதனொடு கொண்ட தொடர்புகளையும் சுருக்க விளக்கமாக, கால, இட நிகழ்ச்சி அடைவுகளுடன், தென்மொழிக்குத் தொடர்ந்து எழுதி விடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். பின்னால் தொகுக்க விருக்கும் தென்மொழி வரலாற்றை நிரப்புவதற்குரிய பக்கங்களாக அமையப் போகும் இச் செய்திகள், முன் கூட்டியே தென்மொழியில் ஒவ்வோர் இதழிலும் தொடர்ந்து வெளியிடப் பெறும்.

அவர்கள் எழுதவேண்டிய கருத்துப் புலனங்கள் இவையாக இருக்க வேண்டும்.

1: தென்மொழியை முதன் முதலாக எப்பொழுது, எங்குக் கண்டனர்; அல்லது எவரால் இவ்விதழ் அறிமுகம் செய்து வைக்கப் பெற்றது. இப்பொழுது எந்த வகையில் தொடர்பு?

2: அவ்வாறு கண்டும், பெற்றும் படித்த தென்மொழி இதழ் எது? அதன் சுவடி, ஓலை, மாத, ஆண்டு விளக்கம், (மறந்து போயிருக்க வழியில்லை; மறந்து போயிருந்தாலும் கவலைப் படாமல் தோராய விளக்கங்களைத் தந்தால் போதும்.)

3: முதன் முதல் பெற்ற தென்மொழி இதழால் எழுப்பப் பெற்ற உணர்வு நிலை, அறிவு நிலை, கொள்கை நிலை.

4: தொடர்ந்து தென்மொழியைப் படிக்க அல்லது பரப்ப எடுத்துக் கொண்ட முயற்சிகள்:

5: தென்மொழியைப் படித்ததால், அல்லது பரப்பியதால் ஏற்பட்ட வாழ்க்கை மாற்றங்கள்; பட்ட தொல்லைகள்; இழந்த இழப்புகள் அல்லது ஊதியங்கள்:

6: தென்மொழி நடத்திய போராட்டங்களில், மாநாடுகளில், நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டது, தொல்லைப் பட்டது, சிறைப்பட்டது போன்ற குறிப்புகள்:

7: தென்மொழி ஆசிரியரோடு கொண்ட, நேரிடையான, மடல் வழியான தொடர்புகள்; சிறப்புகள் முதலியன.

8: தென்மொழிக் குடும்பத் தொடர்புகள், அல்லது பிற தென்மொழி யன்பர்களின் குடும்பத் தொடர்புகள்.

9: தென்மொழியால் அவர்கள் தொடக்கத்தில் பெற்ற உணர்வு நிலைகளில், அறிவுநிலைகளில் படிப்படியாக அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட மாற்றங்கள்; புறக்கணிப்புகள்; அல்லது கருத்து வளர்ச்சிகள்;

10: தென்மொழிக்கு அவர்கள் ஆற்றிய தொண்டு மதிப்பீடும், தென்மொழி அவர்களுக்குச் செய்த தொண்டு மதிப்பீடும்.

11. இறுதியாகத் தென்மொழிக்கு அவர்கள் கூறும் எதிர் காலத் திட்டங்கள்; அல்லது அதற்கு அவர்கள் அமைத்துக் கொடுக்க விருக்கும் முன்னேற்ற வளர்ச்சி வாய்ப்புகள்:

—இப் பதினொரு தலைப்புகளுக்கும் ஆன விடைகளை விளக்கங்களைப் படிக்கச் சுவைதரும் வகையில், கட்டுரை வடிவில் எழுதியனுப்பும் படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். கட்டுரைகளுடன் அன்பர்கள் தங்கள் முழு முகவரிகளையும் தருதல் வேண்டும். படம் இருப்பின் (எல்லைக் கடவு (Pass port) அளவு) அனுப்பி வைப்பதும் வரவேற்கத் தக்கது. குறைந்த அளவு ஆயிரம் அன்பர்களின் கருத்துகளாகிலும் இவ் வரலாற்றுப் பகுதியில் இடம் பெறுதல் வேண்டும் என்று விரும்புகிறோம். கட்டுரைகளை அவை அனுப்பப் பெறும் உறைகளின் மேல் பகுதியில், 'தென்மொழி அன்பர் வரலாறு' என்னும் உரைக் குறிப்புடன் 'ஆசிரியர், தென்மொழி, சென்னை-5' என்னும் முகவரியுடன் எழுதி விடுக்க வேண்டுகிறோம்.

1-12-90
சென்னை-5

ஆசிரியர்
தென்மொழி

குழந்தையாக...

பெருஞ்சித்திரனார்—அவர் பாவலரேறு.
எழுத்தாளர்—இதழாசிரியர் என்பதிலெல்லாம்
எனக்கு ஈடுபாடில்லை.
'தமிழன்' என்பதிலும் ஆர்வமில்லை:
மாந்த நேய ஆளுமை அவரிடம்...
காலில் விழுகிறவன்; மாலை சூட்டுகிறவன்
"இவர்களை" அவர்—'இரக்கத்தோடு பார்க்கிறார்;
போராடுகிறவன், எதிர்ப்பவனைக் கண்டு
அவர் மதிக்கிறார்—
எதையும் எதிர்பாராத உள்ளங்களைக் கண்டு
அவரே வாழ்த்துகிறார்: வணங்குகிறார்...
அன்பிற்கேங்கும் குழந்தை ஏமாற்றப்படும்போது
அதன் விழிகள் அலைமோதும்.
இந்தத் 'தமிழர்களின்'
அன்புக்காக இவரும்...!

—பறம்பை—அறிவன்

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். — அமைச்சர்

பாவேந்தர் பரிசுக்கு உரிய தலைமகன் பாவலரேறே!

திருச்சி, மிகுமின் தொழிலகம், (BHEL) முத்தமிழ் மன்றம் நடத்திய பாவேந்தர் நூற்றாண்டு விழாவில் பாவலரேறு அவர்களுக்குப் பாராட்டும் பரிசளிப்பும்!

கடந்த 22-1-91, 23-1-91, 24-1-91 ஆகிய நாள்களில் திருச்சி மிகுமின் தொழிலகத்தின், ஊரகப் பகுதி, முத்தமிழ் மன்றம், பாவேந்தர் நூற்றாண்டு விழாவையும், பொங்கல் விழாவையும் இணைத்து நடத்தியது.

முதல் நாள் விழாவாகிய பாவேந்தர் நூற்றாண்டு விழா நினைவுப் பரிசளிப்பும், பொன்னாடை போர்த்துதலும் ஆகிய விழா 22-1-91 அன்று மாலை 7 மணியளவில் தொடங்கியது. இந் நிகழ்ச்சிக்குப் பாவலர் திரு. அருள் செல்லத்துரை தலைமை தாங்கினார். திரு. நடுவை முவ. பரமசிவம் (செயலாளர், முத்தமிழ் மன்றம்) வரவேற்புரையாற்றினார். இவ் விழாவில் பாராட்டும் பரிசளிப்பும் பெறுபவராக முத்தமிழ் மன்றத்தார் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களை ஒருமுகமாகத் தேர்ந்தெடுத்தார்.

தொடக்கத்தில் பாவலரேறு அவர்களுக்குப் பாராட்டும் பரிசளிப்பும் நிகழ்த்த வேண்டுவதைக் குறித்து விளக்கி, விழாத் தலைவர் அவர்கள் நீண்டதொரு பாவுரையாற்றினார். அதன் பின்னர் மன்றத் தலைவர் திரு. அ. சோமசுந்தரம் அவர்கள் பாவலரேறு அவர்களுக்கு உயரிய வெள்ளியிழை மிடைந்து பூவேலைப் பாடமைந்த செவ்விய பட்டாடை போர்த்துச் சிறப்பித்தனர்.

அதனையடுத்து, விழாத்தலைவர் அவர்கள் பொன்னொளிர் வண்ண வெண்கலத்தட்டில், மன்றச் சார்பில் திரட்டிய உருபா நான்காயிரத்தை வைத்துப் பாவலரேறு அவர்களுக்குப் பெருத்த கையொலிக்கிடையில் வழங்கினார்.

பட்டாடையும் பரிசளிப்பும் பெற்றுக் கொண்ட பாராட்டு நாயகர் பாவலரேறு அவர்களின் அன்பு கலந்த நன்றியுரைக்குப் பின்னர், பாவேந்தர் விழாச் சார்பாக, பாவேந்தர் நூற்றாண்டு விழாப் போட்டிகளில் வென்ற பாரத மிகுமின் நிலைய ஊரக மாணவ, மாணவியர்க்கும் மன்ற உறுப்பினர்களுக்கும் பரிசளிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

அதன் பின்னர் பாவலரேறு தலைமையில் 'பாவேந்தர் பாட்டரங்கம்' நடந்தது. 'பாவேந்தர்-பைந்தமிழ்த் தேர்பாகன்' என்னுந் தலைப்பில், முனைவர், பாவலர் கடவூர் மணிமாறன், அவர்களும், 'கற்பனை ஊற்றும் கருத்தின் புதையல்' என்னும் தலைப்பில், பாவலர் கருவூர்க் கன்னல் அவர்களும், 'படரும் சாதிப் படைக்கு மருந்து' என்னும் தலைப்பில், பாவலர் ப. எழில்

வாணன் அவர்களும், 'புரட்சிப் புயல், புதுமைப் புயல்' என்னும் தலைப்பில், சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்களும் பாடி, அரங்கை மகிழ்வித்தனர். பாவலரேறு அவர்களின் தலைமைப் பாடல் முன்னுரையாகவும், உணர்வுரை முடிவுரையாகவும் அமைந்தன.

அன்றைய நிகழ்ச்சியில், பாவலரேறு அவர்களைப் பாராட்டிப் பரிசு வழங்கிய பொழுது, நிகழ்ச்சிக்குத் தலைமையேற்ற 'ஏசு பிள்ளைத் தமிழ்ப் பாவலர் திரு. செல்லத்துரை அவர்கள் பாடிய முன்னுரையும், அதன் பின்னர் பாட்டரங்கில் பாவலரேறு பாடிய முன்னுரைப் பாடலும் இங்கு முழுவதும் தரப்பெற்றுள்ளன. அன்பர்கள் படித்துப் பயனடைக. —சிறப்புச் செய்தியாளர்.

ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியமும்
ஒப்பிலாச் சிறப்புடைய திருக்குறளும்
தன்னேரிலாத தமிழுக்குத் தலைமைப் பொக்கசங்கள்.

அவற்றை யடுத்துக்—
கட்டிக் கரும்பெனவினிக்கும் எட்டுத் தொகையும்
ஆட்சித் திறலாரின் மாட்சிமை யுரைத்து
வெற்றித் திறம்பாடும் பத்துப் பாட்டும்
தமிழர்தம் இருப்புக் கணக்கில் நிலைத்த வைப்புகள்!

தோலா நாவின் மேலோர் உரைத்த
பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் சேர்ந்து
கழகம் மருவிய காலத்து இலக்கியங்கள்
தமிழர்தம் செம்மாப்புரைத்தன. ஆயின், பிற்காலத்தே—
மக்கள் வாழ்வியல் இலக்கியங்கள்
ஈயும் வள்ளலைப் பாடுவனவாகவும் மதக்கருத்துகளையும்
தெய்வங்களையும் பாடுவனவாகவும் மாறிவிட்டன.
புலவர்களின் நிலை இழிவாகித் தரம் தாழ்ந்ததால்
மக்கள் இலக்கியங்கள் மாட்சிமையுடன் காட்சிதராமற்
போயின.

ஆனால்—
இவ் விருபதாம் நூற்றாண்டில்
தமிழ் இலக்கியத்தின் இழி நிலையைப் போக்கக்
காரிருள் நீக்கிய கதிரவனாய்க்
கருமுகில் கிழித்த வெண்ணிலவாய்த் தோன்றிய
பாவேந்தர் பாரதிதாசனுக்குப், பின் நிற்பவராய்ப்,
பிறங்கடையாய் இலங்குபவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார்
அவர்கள்!

25 ஆண்டுகளுக்கு முன் நடுவணரசு அதிகாரியாகப்
பணியாற்றிய பாவலரேறு அவர்கள்—
''சலுகை போனால் போகட்டும்—என்
அலுவல் போனால் போகட்டும்
தலைமுறை ஒருகோடி கண்ட—என்

தமிழ் விடுதலை ஆகட்டும்''

—என்று தம் பதவியைத் துறந்து.

''செந்தமிழே உயிரே! நறுந் தேனே!
செயலினை மூச்சினை உனக்களித் தேனே''

—என்று தமிழ்த் தொண்டையே
வாழ்க்கையாக மாற்றிக்கொண்டார்கள்.

''கருமம் செய ஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடைய தில்''

—என்னும் திருக்குறள்

குடிசெயல் வகை இலக்கணத்திற்கு இலக்கியமாக
25 ஆண்டுகளாக அயராது உழைத்து, அரும் பணியாற்றுபவர்
பாவலரேறு அவர்கள்.

''கெடல் எங்கே தமிழின் நலம்; அங்கெல்லாம்
தலையிட்டுக் கிளர்ச்சி செய்க''—என்று

பாவேந்தரைப் போன்றே பாவலரேறு அவர்களும் தமிழ்
மொழி—இன—நாட்டுக்குக் கேடுகள் வரும் போது
சூடுகள் போட்டாற் போலும், சுருக்கென்று தைத்தாற்
போலும்,
குரல் கொடுத்துக் கொண்டிருப்பவர்.

'தமிழைப் பழித்தவனைத் தாய்த்தடுத்தாலும் விடேன்'
என்று தருக்கி எழுந்ததால் தடியடி பட்டும்,
பல நாள் சிறையடைபட்டும் கிடக்க நேரிட்டாலும்,
''மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை—எம்மை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை'' என்று
சிறைக் கம்பியின் வரிகளைச்
செந்தமிழ் வரிகளாக மாற்றியும்
''சாம்போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும்- என்
சாம்பல் தமிழ்மணந்து வேக வேண்டும்'' என்னும்
விடாப்பிடியோடு ஆக்க இலக்கியங்களை ஆக்கி-
வந்துள்ளார்கள்.

''பாலோடு நேர் தமிழும் பைந்தமிழ் மக்களும்
ஆலோடு வேர் என் றறிந்திருந்தும் ஆள வந்தார்,
மேலோடு பேசி விடுவாரேல் அவ்வாட்சி
சாலோடு நீர் என்று சாற்றாய் கருங்குயிலே''

என்று தமிழை மீட்டெடுக்க, திருவள்ளுவர் காலம்முதல்
பாவேந்தர் காலம்வரை பலர் முயன்றும், குறிப்பாக
இவ் விருபதாம் நூற்றாண்டில் மனோன் மணீயம் சுந்தரனார்,
கா.சுப்பிரமணியனார் (கா. சு. பிள்ளை), மறைமலை அடிகளார்,
பாவாணர் போன்றவர்கள் உறுதியாக முயன்றும்
அயர்வு நேரிட்ட போது—

''செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க
நந்தமிழர் உள்ளத்தில் வையம் நடு நடுங்கும்

வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்த தென்று
குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே''—என்று

பாவேந்தர் குறிப்பிட்ட வெந்தணலாய் வந்தவர்
பாவலரேறு அவர்கள்.

'தமிழ் நாட்டில் தமிழ்த் தெருவில் தமிழ்தானில்லை' என்று
கவலைப்பட்டார் பாவேந்தர்.

இலக்கியத்தில், பேச்சில், எழுத்தில் எங்கும்
பிறமொழிக் கலப்பும் பேதைமையும் கிள்ளி எடுக்கப்பட
முடியாத நிலையில் இருந்தபோது—அக் காரிருளைக் களைய
எழுந்த மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களை
எம் போல்வார் காணும் கண்களாகத் திகழ்ந்தவர்
பாவலரேறு அவர்கள்.

தம்முடைய 'தென்மொழி' இதழில் பாவேந்தருக்கு என்று
ஒரு பக்கமும் பாவாணருக் கென்று சில பக்கங்களும் ஒதுக்கிப்
பிழையில்லாத, பிறமொழிக் கலப்பில்லாத, தனித்தமிழ்
நடையில் தொடர்ந்து இதழ் நடத்தி வருபவர்
பாவலரேறு அவர்களே!

சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்னும்
நன்னூல் நூற்பாவின் இலக்கணத்திற்கு இலக்கியமாகவும்
'வெட்டென்று துண்டிரண்டாய் வீசேலோ ரெம்பாவாய்'
என்று செந்தமிழ்ப் பாவையில் பாவலரேறு அவர்களே
பாடியிருப்பதற்கு எடுத்துக் காட்டுக்களாகவும்
தென்மொழி முகப்புப் பாடல்கள், நுணுகச் செதுக்கிய
நுட்பச் சிற்பங்களாய், நூறாண்டானாலும் நினைவில் தப்பா
நிலைத்த வரிகளாய் இருக்கின்றன:

''மொழிப்பற்றுத் தீதென்றால்—இந்திக்கு
முதன்மைதரல் தீதாகாதா?''

ஒரு நாடு, ஓரினம் என்று சொன்னால்
மொழிகளுக்குள் ஏற்றத்தாழ்வு ஏன் ஏன் என்று
பாவேந்தர் வழியில் பாவலரேறு அவர்கள்
உச்ச முறை மன்றம் முதல் மக்கள் நிறை மன்றம் வரை
விடாப்பிடியாகக் கேட்டு வருகின்றார்கள்.

புறநானூற்றில் ஒரு பாட்டுப் பாடியதாலேயே இன்றளவும்
பெயர் நிலைபெற்ற புலவர்களையும், பெயரே தெரியாவிடினும்
'ஓரம் போகியார்' போன்று பாட்டால் நிலைபெற்ற புலவர்-
களையும் நலமறிவோம்:

ஒரு பாட்டு ஓரிலக்கியம் செய்தவர்களையே
இத் தமிழுலகம் மறந்ததில்லை என்றால்,

காலமெல்லாம் நிலைக்கும் கவினுறு பாடல்கள்
ஆயிரம் ஆயிரமாய், நூல்கள் நூற்றளவாய் இயற்றிய
பாவலரேறு அவர்கள்—

பாருள்ள அளவும், பாருக்குள்ளே கடல்
நீருள்ள அளவும், நிலைத்திருப்பார்கள் என்பது
தெரிபொருள் தேற்றமான உண்மை;

கடல் மடை திறந்த வெள்ளம் போல்
பத்துக் கம்பனுக்குச் சமமாய்ப் பாடிய
திரிசிரபுரம் பெரும் புலவர் மீனாட்சி சுந்தரனார்
பாடிய பாடல்களை இன்றுவரை புலவர்கள்
பதம்பிரித்துப் பார்த்து மனம் சலித்து ஒரு புறம்
நிற்கின்றார்கள் என்றால் மற்றொரு புறம்—

"அச்சாகும் நூலெல்லாம் நூலாமோ? ஆங்குசிலர்
மெச்சியுரை செய்வதனால் மேலாமோ?—துச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோறாய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு"—என்று
கேட்கு மளவிற்கு இலக்கியத்தரம் தாழ்ந்து இலக்கணப்
பிழைகள் மலிந்து பெரும்பாலும் மரபிலக்கியத்தையே
எழுதத் திறனில்லாததனால் பாவலர்கள் கைவிட்ட நிலையில்,
பாவேந்தர் ஒருவரே—

எளிமையாகவும் இனிமையாகவும் மரபிலக்கிய இலக்கணப்
படியும், வழுவாது இலக்கியம் படைத்த பெருமை உடையவர்.
அவருக்குப்பின், உயர்தனிச் செம்மொழியாம் தமிழின் இலக்கண
வரம்பிற்குட் பட்டும், இலக்கிய மரபிற்குட்பட்டும்,
புறநானூற்றுக்குத் தொடர்ச்சியாகத் 'தமிழ் நானூறு'
பாடித் தொகுத்தவர் இவரே!

'நூறாசிரியம்' என்னும் நுவலரிய நூல்படைத்துச் சிறப்புப்
பெற்றவரும் பாவலரேறு அவர்களே!

பட்டாங்குப் பனுவலாக 'உலகியல் நூறும்'
வஞ்சிப்பா இலக்கியமாக 'மகபுகு வஞ்சி'யும்
சிந்தியல் வெண்பா இலக்கியமாக 'எண்சுவை எண்பதும்,
இந்தத் தமிழ் மகன் நம் பாட்டன் சொத்துக்குச் சேர்த்த
சொத்துகள் ஆகும்.

சிவனடியார் பாடிய 'திருவெம்பாவை' போலும்,
வைணவ அடியாள் பாடிய 'திருப்பாவை' போலும், இந்தத்
தமிழடியார் பாடிய 'செந்தமிழ்ப் பாவை' மற்ற இரு பாவை
களைக் காட்டிலும் தமிழ்ச்சுவை சொட்டச் சொட்டத்
தரவினைக் கொச்சகக் கலிப்பாவால் இயன்ற இலக்கியம்
ஆகும்.

அந்த ஓரிலக்கியத்திற்கே எழுத்துக்கு" இலக்கம் பொன்
அள்ளிக் கொடுக்கலாம். அவ்வளவு உவமை நயம்! அவ்வளவு
யாப்பமைதி! அவ்வளவு கருத்துப் புதையல்!

பாவேந்தரிடமே பாயிரம் பெற்றுப் பாவலரேறு அவர்கள்
செய்த 'கொய்யாக்கனி', பாவாணர் அவர்களின்
அணிந்துரைப்படி எல்லாருக்கும் கொய்யுங் கனியாகும்
பெற்றியுடையது.

'தமிழ்ச்சிட்டு'களையும் விட்டுவிடாமல்,
கொட்டியளந்த குறுமணிச் சரமாய் இவர்கள் பாடிய பாடல்
-களே 'பள்ளிப் பறவைகள்' என்னும் இளைஞர் இலக்கியம்.

இன்னும் கனிச் சாறுய்த் தொகுத்த நூற்றுக் கணக்கான
பாடல்களையும் தவிர, தேன் கொட்டும் தனிப் பாடல்கள்
ஏராளம் ஏராளம்!

பழைமைக்குப் பழைமையாய்ப்
புதுமைக்குப் புதுமையாய் இவர்கள் இயற்றிய
கற்பனை ஊற்று வரிகள் எண்ணத்தைத்
திண்ணமாய்க் கிளரும் கீற்றுவரிகள்.

பாட்டெழுதுவது மட்டுமின்றி, இவர்கள்
தொல்காப்பிய உரையாசிரியர்களான நச்சினார்க்கினியர்,
இளம்பூரணர், சேனாவரையர் நடைக்கு ஒப்ப, இக்கால
உரை நடைத் தமிழை உயர்த்தி எழுதியும், திருக்குறள்
உரையாசிரியர் பரிமேலழகர் நடைக்கும் மேலான நடையில்
விரித்து எழுதியும் இக்கால உரைநடை இலக்கியத்தைச்
செறிவுள்ள தாக்கியுள்ளார்கள்.

மறைந்து வரும் தமிழ்ச் சொற்களைத் திரட்டியும்,
வழக்காற்றுத் தமிழ்ச் சொற்களைத் தொகுத்தும், பிறமொழிக்
கலப்புச் சொற்களுக்குத் தமிழ்ப் பெயர்ப்புச் செய்தும்,
பல் துறை கலைச் சொற்களைப் புதுக்கியும், அறிவியல்
கட்டுரைகளை அடுக்கியும், மருத்துவ அறிவினைப் பெருக்கியும்
'தென்மொழி'என்னும் தனித்தமிழ்த் திங்களிதழை 30 ஆண்டு
களுக்கும் மேலாகத் தொடர்ந்து நடத்தி வருகின்றார்கள்.

ஒருபக்கம் கூட வணிக விளம்பரமின்றி, அரசு விளம்பரமின்றி
அரசுச் சலுகையின்றி, மாவட்ட நடுவ நூலகங்களுக்கு
வாங்கப்படாத நிலையில்,

''கெஞ்சுவதில்லை பிறர்பால் அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை; எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை; உலகில் எவரும் எதிர்நின்றே''

என்று இடர் மலைகளுக்கு எதிர்மலைவு கொள்ளாமல், இதழ்
நடத்தி வருகின்ற செம்மாப்பு எண்ணும் போதெல்லாம்
பாவேந்தரையே நினைவுறுத்துகின்றது.

நடுவு நிலைமை பிறழாமல், சாய்கால் எதுவும் இல்லாமல்
பிறர் சொன்னதையே சொல்லிச் செய்ததையே செய்து,
பாவேந்தர் சொன்னது போல் தேய்புரிப் பழங்கயிற்றைப்
போல் ஆகாமல், ஒருவரையே யாயினும் உள்ளன்போடு
பாராட்ட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு
பாவலரேறு அவர்களைப் பாவேந்தர் நினைவுப் பரிசுக்கு
உரிமையுடைய தலைமகன் என்று இம்மன்றத்தினர் தேர்ந்து
தெளிந்து பாராட்டுகின்றோம்! ○

பாவேந்தர் இறுதி நாள்கள்!

குடந்தை வீரா. இராசகோபாலன், கீ. க. தே; க. மு.

இக் கட்டுரையாசிரியர் திரு. குடந்தை வீரா. இராசகோபாலன் அவர்கள் கீழ்க்கலைச் தேர்ச்சியும் (B. O. L.) முதுகலையும் M. A. தேறியவர். 64 அகவை ஆனவர். தஞ்சைமாவட்டம மன்னார்குடியில் பிறந்தவர். குடந்தையிலும் திருவாவடுதுறையிலும், அண்ணாமலை, சென்னைப் பல்கலைக் கழகங்களிலும் கல்வி கற்றவர்; உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியராகவும், பின்னர் சென்னை ஜெயின் கல்லூரியிலும், பூண்டி புட்பம் கல்லூரியிலும், வேறு சில கல்லூரிகளிலும் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். மதுரையில் 1981-இல் நடந்த ஐந்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்டு 'தமிழ் எழுத்துச் சிரமைப்பு' என்னும் தலைப்பில் கட்டுரை படித்தவர்.

(முன் பக்க தொடர்ச்சி)

முதற்கண்,
கருத்தாயும் செம்புலவர் கடலூர் மணிமாறன்
திருத்தமிழ்க்குப் பாவேந்தன் தேர்ப்பாகன் என்பதனை
நிறுத்தாய்ந்து பாவரங்கை நிகழ்த்தித் தொடங்கிவைப்பார்-
பொறுத்தாய்ந்து பாருங்கள்! பூரிப்பில் மிதப்பீர்கள்!

கருவூர்க் கன்னல் கலைஞர்க்குச் செல்லப்பிள்ளை
மருவில்லாத் தூய்தமிழில் மணக்கின்ற பாட்டிசைப்பார்!
"கற்பனை ஊற்றும் கருத்தின் புதைய' லென்று
சொற்புனையும் பாவேந்தைச் சோர்வின்றிக் காட்டிடுவார்!

பாவலர் எழில்வாணன் பதறாமல் பாட்டிசைக்கும்
ஆவலர்; தூயதமிழ் ஆர்வலர்! பாவேந்தர்,
"படரும் சாதிக்குத் தந்த படை மருந்தை'த்
தடவ வருகின்றார்; தனித்தமிழில் பாடல் சொல்வார்!

எல்லாமாய் இருக்கின்ற ஏற்றமுற்ற தமிழ்மொழியின்
சொல்லாய் வறிஞர், சோர்வின்றிப் பாட்டிசைக்கும்
வல்லாளர் பாவேந்தர் வாழ்ந்திருந்த ஊர்க்காரர்!
பொல்லார் நடுக்கமுற, 'புரட்சிப் புயல்' என்றும்
'புதுமைப் புனல்' என்றும் பாவேந்தைப் புறந்தருவார்,
பாவலர் அருமி பொங்கிவிடும் பாச்சுவைபோல்!

மாணவப் பருவத்திலிருந்தே பெரியாரின் தன்மான இயக்கத்தில் தொடர்பு கொண்டவர். 1938-இல் தொடங்கிய முதல் இந்தியெதிர்ப்புப் போராட்டத்திலும், 1948-ஆம் ஆண்டு இந்தியெதிர்ப்புப் போராட்டத்திலும் கலந்து கொண்டு, பலமுறை சிறை சென்று, காவலரால் உயிர் போகும் அளவிற்குத் தாக்கப்பட்டுத் தம் செவிப்புலனை இழந்த இவர், 1968-இல் தி. மு. க. சார்பில் தேர்தலில் நின்று தோற்றவர். தொடக்கத்தில் தி.மு.க. மாணவர் கழகத்தில் பல பொறுப்புகளை ஏற்றவர். அக்கழகத்திற்காக அரும்பணியாற்றி மக்கள் தொண்டிற்காகவே மணவாழ்வைத் துறந்தவர். இவர் சிறந்த பொது உணர்வாளர்; நேர்மையான மக்கள் தொண்டர்; உண்மையும் ஒழுக்கமும் நிறைந்த பண்பாளர்.

இவர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடன் பழகி இருந்து, அவர் இறுதி நாள்களில் நடந்த செய்திகளை இங்குக் கூறுகின்றார். இது பாவேந்தர் வாழ்வில் ஒரு குறிப்பிடத் தகுந்த வரலாற்றுச் செய்தி. அவரின் கடைசி காலக் கண்ணீர் நாள்களின் உண்மை நிகழ்வுகள் இவை. படித்துப்பாருங்கள். மனம் புண்படுகிறது.

—ஆசிரியர்

14—4—1964 என நினைவு; அன்று மாலை நானும், நண்பர் பெரியார் பேருரையாளர், புலவர். திரு. ந. இராமநாதன் அவர்களும் புரட்சிப் பாவேந்தர் அவர்களைக் காண சென்னை, தியாகராயர் நகர், இராமன் தெரு 10-ஆம் எண் வீட்டிற்குச் சென்று, புரட்சிப் பாவேந்தர் அவர்களைக் கண்டு உரையாடிக் கொண்டு இருக்கையில், புரட்சிப் பாவேந்தர் அவர்கள் "பாரதியார்" படம் எடுப்பது தொடர்பாக திரு கோ. துரைசாமி (G.D.-நாயுடு) அவர்களைப் பார்ப்பதற்கு இன்று இரவு கோயம்புத்தூருக்குச் செல்லவிருக்கிறேன்." என்று சொன்னார். அப்பொழுது பாவேந்தரின் துணைவியார் திருவாட்டி பழனியம்மாள் அவர்களும், இன்னொருவர் தாயாரம்மாள் என்று சொல்வார்கள்; அவர்களும் வந்து "காலையில் இருந்து 'நெஞ்சுவலிக்கிறது' என்று சொல்கிறார்; மருத்துவரிடம் காட்டுங்கள் என்று சொன்னால் கேட்க மாட்டேன் என்கிறார்" என்று சொன்னார்கள். நானும், நண்பர் புலவர். திரு. ந. இராமநாதன் அவர்களும் பாவேந்தர் அவர்களைக் கேட்டதற்குப் பாவேந்தர் அவர்கள் "அப்படி ஒன்றும் இல்லை. இலேசாகத்தான் வலிக்கிறது" என்றார். நானும், நண்பர் புலவர். திரு. ந. இராமநாதன் அவர்களும் "இரவுதானே கோயம்புத்தூருக்குச் செல்லப் போகிறீர்கள்; எதற்கும் இப்பொழுது மருத்துவரிடம் காட்டலாம் வாருங்கள்" என்று வற்புறுத்த, பாவேந்தர் அவர்கள் சரி என்று சொல்லி, அவருக்கு வேண்டிய மருத்துவர் சென்னை இசுடான்லி மருத்துவமனையில் இருக்கிறார்; அவரைப் போய்ப் பார்க்கலாம் என்று சொல்ல நான், நண்பர் புலவர். திரு. ந. இராமநாதன் அவர்கள், பாவேந்தர் அவர்கள் ஆகிய மூவரும் வாடகை உந்து வண்டியில் (Taxi) சென்னை இசுடான்லி மருத்துவமனை நோக்கிச் சென்று கொண்டு

இருக்கையில் நடுவண் சிறைச் சாலைக்கு அருகில் வரும் பொழுது பாவேந்தர் அவர்கள் நெஞ்சுவலி பொறுக்க மாட்டாது துடிக்க, நானும், நண்பர் புலவர் திரு. ந. இராமநாதன் அவர்களும் உடனே சென்னைப் பொது மருத்துவமனை இடை நேர்ச்சிப் பார்வைப் பிரிவுக்குப் (G. H. Casualty) பாவேந்தரைக் கொண்டு சென்றோம். அங்கு, அவரை ஆய்வு செய்து, ஐந்தாவது மருத்துவமனைப் படுக்கைத் தொகுதியில் (Ward No. 5) சேர்த்-தார்கள். அத்தொகுதிப் பொறுப்பு மருத்துவர் (Ward Doctor) மருத்துவர் திரு. ஏ. எல். அண்ணாமலை அவர்கள் என்பதறிந்து, அவர் அங்கு இல்லாததால் நானும் நண்பர் புலவர் திரு ந.இராம-நாதன் அவர்களும் மருத்துவர் திரு. அண்ணாமலை அவர்கள் வீட்டிற்குச் சென்றோம். அங்கு திரு. அண்ணாமலை அவர்களின் துணைவியார் மருத்துவர். திருவாட்டி. உரூபி அவர்களுடைய உடன் பிறந்தவர் வந்து "அவர் இல்லை" என்று சொன்னார். நானும், நண்பர் புலவர் அவர்களும் அவர்பால் பாவேந்தர் அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள விளத்தத்தைச் சொல்லிவிட்டு வந்தோம். மறுநாள் காலை மீண்டும் மருத்துவர் திரு. அண்ணாமலை அவர்களைப் பார்ப்பதற்காக, அவர் வீட்டிற்குச் சென்ற எங்களிடம் அவர்களின் அளியர் (மைத்துனர்) வந்து அவர் இல்லை; மருத்துவத் தேர்வுக் கண்காணிப்பாளராகப் (Medical Examinations' Superintendent) போயிருக்கிறார்; அவர் மருத்துவமனைக்கு வரமாட்டார்; அவரைப் பார்க்க முடி-யாது.'' என்று சொல்ல, அவருக்கும், எங்களுக்கும் இடையே சிறிது உரைக் கடுமை (வாக்கு வாதம்) ஏற்பட்டது.

மருத்துவமனையில் சேர்க்கும் போது வருமானம் கேட்டார்-கள்; அப்பொழுது பாவேந்தர் அவர்கள் ஒய்வூதியம் (pension) எண்பது உரூபா என்று சொன்னார்கள். ஆகவே, பின்னர் நானும், நண்பர் இராமநாதன் அவர்களும் சிறப்பு முறையான மருத்துவமனைப் படுக்கைத் தொகுதிக்கு (Special Ward) மாற்ற முயன்ற போது குறைந்த வருமானம் கொடுத்திருப்பதால் மாற்ற இயலாது என்றார்கள்.

புலவர் இராமநாதன் அவர்கள் அப்பொழுது பெரியார் பேருரையாளர் அல்லர்; தஞ்சை, கரந்தை தமிழ்க் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றிக் கொண்டு இருந்தார். ஆகவே, அவர் மறுநாள் இரவு தஞ்சை சென்று விட்டார். நானும் சென்னை மீனம்பாக்கம் ஏ. எம். ஜெயின் கல்லூரித் தமிழ்த்துறையில் பணி-யாற்றிக் கொண்டு இருந்த காலம் அது; நான் நாள் தோறும் காலையில் கல்லூரிக்குச் செல்வதற்கு முன் மருத்துவமனைக்குச் சென்று பாவேந்தர் அவர்களுக்குப் பணிவிடைகள் செய்து விட்டுப் பிறகு கல்லூரிக்குச் செல்வேன்; அதே போன்று மாலை-யில் கல்லூரி விட்டதும் நேராக மருத்துவமனைக்கு வந்து, பாவேந்தர் அவர்களுக்குப் பணிவிடைகள் செய்து விட்டுப் பிறகு வீட்டிற்கு வருவேன்; இவ்விடை நேரத்தில் அவர் தமது துணைவியார் உடனிருந்து வந்தார்;

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட எட்டாவது நாள் (அஃதாவது 21—4—1974 என நினைவு) அன்று காலைதான் பாவேந்தர் மகன் திரு. மன்னர் மன்னன் அவர்கள், அவர் தம் துணைவியாருடன் மருத்துவமனைக்கு வந்தார். அவர்கள் வந்து ஒரு மணி நேரம்கூட ஆகியிருக்காது; பாவேந்தர் அவர்களின் இடது கையில் செருகப்பட்டு இருந்த மாச்சருக்கரை (Glucose) நீரேற்று ஊசியைப் பாவேந்தர் அவர்களே பிடுங்கி எடுத்து, எறிந்து விட்டுக் கழிப்பறைக்குச் சென்று வந்து படுத்த சிறிது நேரத்திற்கெல்லாய உடல்நிலை கவலைக் கிடமாகியது. பின் நான் உயிர்த் தண்ணீர் ஊற்றிய சற்று நேரத்திற்குள் அ'தாவது காலை 8 30 மணியளவில் பாவேந்தர் அவர்களது இன்னுயிர் பிரிந்தது. பாவேந்தர் அவர்களது இன்னுயிர் பிரிகையில் என் தங்கையின் கணவர் திரு இரா. இராமு அவர்கள், பாவேந்தர் அவர்களுடைய வாயில் விரலை விட்டு அவர் அணிந்திருந்த பொய்ப் பல் வரிசைகளை வெளியில் எடுத்தார். அப்பொழுது பாவேந்தர் தம் மகன் திரு. மன்னர் மன்னன் அவர்கள், வெளி முற்றத்தில் (வராந்தாவில்) சுவரில் சாய்ந்து கொண்டு உட்கார்ந்து இருந்தார். அவர் தம் துணைவியார் வெளி முற்றச் சுவரில் சாய்ந்து கொண்டு நின்றிருந்தார்.

பாவேந்தர் அவர்களின் துணைவியார் திருவாட்டி. பழனியம்மாள் அவர்கள் என்பால் "என்னைக் கடல்ல (கடலில்) தள்ளிடுப்பா" என்று கூறி, அழுது புலம்பிக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் பால் மருத்துவமனை ஆவணங்களில் ஒப்பம் வாங்கியபின் அவர்களையும், திரு. மன்னர் மன்னன் அவர்களையும் அவர்தம் துணைவியார் அவர்களையும், திரு. தமிழ்வாணன் அவர்களின் வண்டியில் (car) ஏற்றி, சென்னை, தியாகராயர் நகர், இராமன் தெரு 10-ஆம் எண்ணுள்ள அவர்கள் வீட்டிற்கு முதற்கண் அனுப்பி வைத்தோம். பாவேந்தர் அவர்களின் உயிர் பிரிகையில், அவர் அருகில் நான், என் அளியர் இரா. இராமு அவர்கள், பாவேந்தரின் துணைவியார் திருவாட்டி. பழனியம்மாள் அவர்களின் மகன் திரு. மன்னர் மன்னன் அவர்கள், அவர்தம் துணைவியார் ஆகிய அய்ந்து பெயர்களைத் தவிர வேறு எவரும், இல்லை.

பாவேந்தர் அவர்கள் மறைந்ததும் முதன்முதலாக மருத்துவமனைக்குக் கண்ணதாசன் அவர்கள் வந்தார்கள். அவர்கள்பால் சென்று பாவேந்தர் சடலத்தை வீட்டிற்கு எடுத்துச் செல்ல அவர்கள் தம் வண்டியைக் (car) கேட்டேன். அதற்கு அவர் "அதென்ன? வேட்டியா? புடவையா? மடித்து வைத்து எடுத்துப் போவதற்கு" என்று கேட்டு, வண்டி கொடுக்க மறுத்து விட்டார். சென்னை பொது மருத்துவமனைச் சவஊர்தி அப்பொழுது மூலக்கொத்தளம் போயிருந்தது. அதனால் வேறு வழி இல்லாததால் அவர்தம் வண்டியைக் கேட்டேன்; மறுத்து விட்டார். நான், பாவேந்தர் அவர்களது பொன்னுடல் சவக்கிடங்கிற்குப் போகாமல் எடுத்து வர முயற்சி செய்தேன்;

முடியவில்லை; சவக்கிடங்கிற்குக் கொண்டு போய் விட்டார்கள். சவக்கிடங்கிற்குக் கொண்டு சென்ற பிறகுதான் முனைவர். மு. வ. அவர்கள் வந்தார்கள். அவர்கள்பால் சென்று நிலைமைகளை எடுத்துச் சொன்னேன்; அவர்கள், அவர்தம் வண்டியைக் (car) கொடுத்து உதவினார்கள். அவர்கள் வண்டியில் பாவேந்தர் அவர்களது பொன்னுடலை ஏற்றி, முற்பகல் சென்னை தியாகராயர் நகர், இராமன் தெரு 10- ஆம் எண் அவர்கள் வீட்டிற்குக் கொண்டு வந்து, பொதுமக்கள் பார்வைக்கு வைத்தோம். அப்பொழுது பார்க்க வந்த சென்னை அண்ணுசாலை அஞ்சலக அலுவலகத்தில் பொது மக்கள் தொடர்பு அலுவலராகப் (P. R. O.) பணியாற்றிய செல்வி. அனுசூயா அவர்கள் மயக்கம் போட்டு விழுந்தார்கள். நான், திரு. மன்னர் மன்னன் அவர்கள்பால் "சென்னையிலேயே அடக்கம் செய்யலாம்; சிறப்பாக இருக்கும்" என்று சொன்னதற்கு திரு. மன்னர் மன்னன் அவர்கள் "என் தமக்கை, தங்கைகள், உற்றார், உறவினர்கள் எல்லாம் பாண்டிச்சேரிக்குத்தான் வருவார்கள். ஆகவே, பாண்டிச்சேரிக்குக் கொண்டு போய்த்தான் அடக்கம் செய்ய வேண்டும்." என்று வலியுறுத்திச் சொன்னார். பிறகு, பிற்பகல் நடிகர். திரு. எசு. எசு. இராசேந்திரன் அவர்கள் வண்டி (Van) கொடுக்க, அவ்வண்டியில் பாவேந்தர் அவர்களது புகழுடல் புதுவைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அப்பொழுது நான் இடது கால் பெருவிரல் ஒற்றம்மையால் தொல்லைப்பட்டுக் கொண்டு இருந்ததால் என்பால் இருந்த சென்னை பொதுமருத்துவமனை இறப்புச் சான்றை (G. H Death certificate) மயிலை திரு. டி. உலோகநாதன் (திராவிடர் கழகம்) அவர்கள்பால் கொடுக்க, அவர் அவ் வண்டியில் சென்றார். புதுவைச்சவஅடக்கத்திற்குப் பிறகு அஃதாவது மறுநாள் மயிலை திரு. டி. லோகநாதன் அவர்கள் சென்னை வந்ததும் காலமானார். பாவேந்தர் அவர்கள் மறைவிற்குப் பின் வெளிவந்த "தென்மொழி" இதழ் வாயிலாகவும் இதன் குறிப்புகளை அறியலாம்.

பாவேந்தர் அவர்களது நூற்றாண்டு விழா கொண்டாடும் இவ்வேளையில் இவற்றை நினைவு கூர்தல் சாலப் பொருத்தமாகும்.

அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு!

அச்சகப் பணியாளர்கள் குறைவாலும், பெரும்பாலான முகவர்களின் மிகுதியான நிலுவையாலும், அடிக்கடி நிகழும் ஆசிரியரின் வெளியூர் நிகழ்ச்சிகளாலும், முறையான விற்பனைக்கு முன்னரே தடைகள் வந்ததாலும், கடந்த இரண்டு மூன்று மாதங்களாக ஆசிரியரே பொறி இயக்கம் செய்து அச்சிட வேண்டியிருப்பதாலும் இதழ்கள் காலந்தாழ்ந்தே வெளிவர வேண்டி உள்ளன. இந்நிலையைத் தவிர்க்கவே இயலவில்லை. ஆனால் இதழ்கள் எப்படியும் தட்டுத் தடுமாறியேனும் வந்தே தீரும். அன்பர்கள் பொறுத்துக் கொண்டு, இத் தவிர்க்க இயலாத தண்டமிழ்ப் பணிக்குத் துணை நிற்கக் கேட்டுக் கொள்கிறோம்.

— அமைச்சர்

அப்பாத்துரையார் குடும்ப நலக் கொடை!

பட்டியல்-5

ஆசிரியரின் அன்பு வேண்டுகோளுக்கு இசைந்து பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் அவர்களின் குடும்பத்துக்கு உதவிய தூய தமிழ் நன்னெஞ்சங்கள்;

(4-10-90 முதல் 5-2-91 முடிய)

		உருபா
185	என். தனராசு அரிமா வளங்கோ, பிரான்சு (வரைவோலை வழி)	300
186	பேரா. சாலை, இளந்திரையன், சென்னை 86 (8—ஆம் முறை, அக் '90')	100
187	நா. வினைதீர்குன்றன், புதுக்கோட்டை	80
188	பேரா. சாலை. இளந்திரையன் சென்னை-86 (9—ஆம் முறை—நவம் '90')	100
189	பேரா. சாலை, இளந்திரையன், சென்னை-86 (10—ஆம் முறை—திசம் '90')	100

கி. பெருமாள், ஆசிரியர், கீரனூர் அவர்கள் திரட்டி விடுத்த தெர்கை விளக்கம் (வரிசை எண் 199 முடிய)

190	சி. கணேசன், ஆசிரியர் கீரனூர்	25
191	செல்ல கணேசன் ,,	25
192	கணபதி சுப்பிரமணியன் ,,	10
193	பாவலர். சி. சாந்தகுமாரன் ,,	10
194	சுமல், துளசிதாசன், குளத்தூர்	5
195	ப. தங்கவேலு ஆசிரியர் கீரனூர்	10
196	க. அய்யாக்கண்ணு, ஆசிரியர் ஒடுக்கூர்	10
197	க. பொன்னையர் ஆசிரியர், கீரனூர்	10
198	சா. செபத்தியான் ஆசிரியர் நாஞ்சூர்	10
199	எல். கோமதி, ஆசிரியை, சித்தாம்பூர்	5
200	பேரா, சாலை. இளந்திரையன், சென்னை-86 (11—ஆம் முறை—சன '91')	100
201	பேரா. சாலை. இளந்திரையன் சென்னை 86 (12—ஆம் முறை—பிப் '91')	100

மொத்தம் 1000:00

முந்தைய மொத்தம் 13677:50

தொகு மொத்தம் 14677.50

தமிழறிஞர் குடும்பத்தைக் காக்கும் தண்டமிழ்ப் பணிக்குத் தோன்றாத் துணையாக நிற்கும் மெய்ம்மைத் தமிழ் நெஞ்சங்களுக்கு எம் நெஞ்சு நிறைந்த வாழ்த்துகளும் நன்றியும் உரியவாகுக!

குறிப்பாக, கீரனூர் ஆசிரியர் கி. பெருமாள் அவர்கள் இரண்டாம் முறையாக நன் கொடை திரட்டி விடுத்தமைக்கும், பேரா. சாலை, இளந்திரையன் அவர்கள் ஒவ்வொரு மாதமும் தவறாது தொகை விடுக்கின்றமைக்கும் எம் நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ○

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

○ : *1443* : வினையின் நீங்கிய விளங்கிய அறிவராய் எம்மின் மொழி, இன, நாட்டுப் பணிக்காக அன்றன்றும் உழைக்கும் 'பாவலரேறு' ஐயாவிற்கு இளங்கோவன் எழுதுகின்றேன். வணக்கம். ஐயாவின் உடல் நலம் விழைந்தேன். அண்மையில் வந்த நம் 'தென்மொழி'யின் அட்டைப்பாட்டு எம் நெஞ்சைத் தைத்தது. ''துவளாத வாழ்வென் வாழ்வே'' என்று எழுதிய கைகள் ''உள்ளத்தால் நலிந்துள்ளேன் உடலாலும் மெலிந்துள்ளேன்'' என்று எழுதியதை எண்ணி எண்ணி இளைப்புறுகின்றேன். 'தமிழ்ச்சிட்டி'ன் ஆசிரியவுரைகள் தங்களின் ஆழ்ந்த அறிவினை நிலைநாட்டுகின்றன. நெட்ட நெடிய 'தென்மொழி' வரலாற்றுச் செலவின் வெற்றிகளை நாடெங்கும் காண்கின்றேன். ஏட்டில் எழுதப்பெறவில்லை எனினும், அயல்நாடுகளில் தென்மொழியின் வரலாறு தெருவோரச் சிறுவர்களும் அறிந்துள்ளனரே! அதுவே 'தென்மொழி'க்கு வெற்றி. ''திருக்குறள் மெய்ப்பொருளுரை'' தங்களை உலகிற்குக்காட்டும். பணிவுடன்.

— மு. இளங்கோவன், திருப்பனந்தாள்.

○ : *1444* : எங்கள் பாவேந்தர், தந்தை பாவலரேறு அவர்களுக்கு வணக்கமுடன் எழுதும் மடல். ஐயா நான் இருமுறை உங்கள் அன்பு வேண்டுகோளின்படி முன் அறிவிப்பில்லாமல் உங்கள் அன்புக்கும் அறிவுரைக்கும் நேரில் வந்து விட்டுச் சென்றேன். இனி ஒரே ஒரு தடவை என்னை அனுமதிக்கத் தங்களைத் தாழ்ந்து வணங்கிக் கேட்டுக் கொள்ளுகிறேன்; அது வேறொன்றுக்கும் இல்லை. எனக்குச் சிறிது இசை அறிவு உண்டு; நமது 'தமிழ்ச்சிட்' டில் வந்த பாடல்களில் சில பாட்டுகளுக்கு நான் இசை அமைத்துப் பாடி இருக்கிறேன். இறுதியாக ஆகத்து மாத 'தமிழ்ச்சிட்'டில் தாங்கள் எழுதிய 'சிந்தித்துப் பார்ப்பீர்களே. எதிலும் சிறந்தவற்றை ஏற்பீர்களே' என்ற பாடலுக்கும் இசை அமைத்திருக்கிறேன். ஆகையால் தங்கள் முன் பாடிக்காட்ட என்னை அனுமதிக்க பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். தங்கள் மாணவன்,

—செ. தானியேல், காட்டுப்பாடி, வேலூர்-7.

திரைப்படக் கூத்தர்களிடம் சிக்கியுள்ளது; ஆங்காங்கே இறைவனுக்குக் கோவில் எழுப்புவது போல தமிழ் நாடெங்கும் நடிகனுக்கு 'இரசிகர் மன்றம்' எனும் பெயரில் இளைஞர்கள் தெருவுக்குத் தெரு மன்றங்களைத் திறந்து அந்த ஒரே நாள் கூத்துக்கு செலவழிக்கின்ற தொகைமட்டும் உருபா 700 (அல்லது) 800-ஐத் தாராளமாகத் தாண்டும்.

(8000, 10000, இலக்கம் என்று செலவழிக்கும் மன்றங்களும் உண்டு. — ஆசிரியர்.) உண்பதும், உடுப்பதும், உறங்குவதும் தமிழர்களின் சொத்தாக மாறிவிட்டதே என என்னும் போது நெஞ்சு வெடித்துச் சிதறுகிறது, அய்யா!

இனியேனும் இளைஞர்கள் விழித்துக் கொள்ள வில்லையானால் நம் இனத்துக்கே இன்னல் நேர்ந்துவிடும்; இளைஞர்கள் தாம் இதற்கு ஒரு நல்ல முடிவினை எடுக்க வேண்டும்; அவர்களை என் இருகைகள் கூப்பி வேண்டிக் கொள்கின்றேன். இனியேனும் ஒன்று சேருங்கள். தமிழ் நாட்டின் விடுதலை ஒன்றே நமது குறிக்கோளாகட்டும்; எங்கும் தமிழ், எல்லாம் தமிழ், எதிலும் தமிழ், என்று நம் தமிழின முரசு ஒலிக்கட்டும், கடலூர் அன்பர் திரு. கா. இராசகோபாலன் அவர்கள் கூறியது போல, மாதம் ஒவ்வொரு தென்மொழி அன்பரும் உருபா 5 அனுப்பினாலும் கூட தென்மொழி இதழினை நிறுத்த வேண்டிய தேவை ஏற்படாது.

அன்புடன்— க. தமிழன்பன்; வெங்காலூர்-21.

O : 1437 : ஐயா! அரும்பெரும் ஆசானே! அடிதாழ வணங்குகின்றேன்! உய்யாத் தமிழினம் மீட்க உயிர் தரும் திருவே! செய்யாத் தொண்டால் சிறியார் சிறப்பும் பதவியும் உற்று நைவார், நாளொரு மூட்டை நலிவுப் பொய்யை அவிழ்த்தே! பெய்யும் மழையாய்த் தொண்டைப் பல்லாண்டுகள் நீர் செய்தும், வையாபுரியர், களையர் வடிவை மறைத்தே நிற்பார்! தெய்வத் தமிழைக் காக்கும் தூயோய்! உம்மை வணங்கிச் செய்வோம் தொடர்ந்து நம்பணியை! செந்தமிழ் ஒருநாள் எழுவே! — அரிமாவளங்கோ, பிரான்சு!

O : 1438 : வணக்கத்திற்கும் போற்றுதலுக்கும் உரிய தமிழ் முதறிஞர் அவர்களுக்குத் தங்கள் அன்புள்ள கருவை மணவழகன் பணிவன்புடன் வரையும் மடல்.

தங்களை நான் காரி, அறிவன் (18—12—90) இருநாள்களிலும் கண்டதை என் வாழ்வின் பெறற்கரிய பெரும் பேறுகக் கருதுகின்றேன்; ஐம்பத்தோர் அகவையிலேனும் தமிழுக்காக வாழ்கின்ற சான்றோர் ஒருவரை எனக்கு எல்லாம் வல்ல அருட்பெருஞ் சுடர் காட்டியமைக்காக அந்தப் பேராற்றலுக்கு என் வணக்கத்தைச் செலுத்துவேன். உயர்ந்தோர் பார்வையால் உள்ளம் வெளுக்கும் ஒளியும் தோன்றும் என்பதை நான் முற்றிலும் உணர்ந்து கொண்டேன்; உங்கள் அருளாலும் வாழ்த்தாலும் புதுத்தெம்பும் வேகமும் பெற்றேன். எல்லாம் வல்ல இறைவன் அருளால் தாங்கள் பல்லாண்டு வாழ்ந்து, தமிழ்த் தொண்டினைச் செய்து தமிழையும் தமிழர் வாழ்வையும் உயர்த்த வேண்டும் என்று வணக்கத்துடன் கூறி மகிழ்கின்றேன். நன்றி, வணக்கம் தங்கள் வழியோன். — ம. மணவழகன். கரூர்-1

O : 1439 : பேரன்பு கெழுமிய அண்ணா பாவலரேறு அவர்கட்குத் தம்பி எம்.ஏ. சலாலுதீன் வரையும் மடல்; வணக்கம் நலம்; உங்களின் உடல் நலத்தைக் கேட்க மிக ஆவல். தொண்டு— தொண்டென்னக் காலத்தையே கழித்த நீங்கள் காலமறிந்து கூட உணவெடுப்பதில்லை, என்று என் நண்பர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றேன். நான் நேரில் உங்களை அலுவலகத்தில் சந்தித்த போது கூட மாலை வரை பகலுணவு கொள்ளாமல் பணியில் ஈடுபட்டது

கண்டேன். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். உடலை-யும் கவனித்துக் கொள்ளுங்கள். — எம்.ஏ.சலாலுதீன், சிங்கப்பூர்.

O : 1440 : செந்தமிழ்க் குரிசிலரே! செந்நாப்புலவரே! சிங்கநிகர் பாவலரேறே! சால வணக்கம்.

பைந்தமிழ் ஞாயிறு பாவாணர் வழிநின்று, முந்து பெருமை-களை, வேர்ச்சிறப்பியல்பை, சிந்தை குளிர செப்பி வரும் நாவலரே! சீறிவரும் எதிர்ப்பையெல்லாம்—சிரிப்பால் வரவேற்றுச் சில்லறைகள் செய்கின்ற சீர்கெட்ட செயலையெலாம்—தூவல் முனையாலே முறியடித்துத் துள்ளிவரும் வேலெனவே-எழுத்தால், பேச்சால்-இஞ்ஞாலம் ஈந்து வரும் என்றன் உளம் கவர்ந்த இனியநல் ஏந்தலே!

தங்களின் தமிழ்த்தொண்டு இத்தரையினில் உயர்ந்து விளங்கி ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்ற உயர்ந்து நிலையை உன்னி மகிழ்-கிறேன். பாவேந்தர் பேரவை மனமுவந்து போற்றிப் பாராட்டு-கின்றது. தமிழ்க்கடல் மறைமலையடிகள், மொழிஞாயிறு பாவாணர், தமிழ்த்தென்றல் திரு. வி.க., பாவலரேறு பெருஞ்-சித்திரனார் என்ற வரிசையில் தாங்கள் நின்றிலங்கி ஆழ-அழகுற-திண்மையோடு நின்று தனித்தமிழ்ப் பணியாற்றும் பாங்கே பாங்கு! தங்களையன்றி யாரிங்கே தூய தமிழுக்காக வாழ்பவர்?

எங்கள் பேரவையின் செயலர், ஓவியர் முகுந்தன், பொருளர் புலவர்-செம்பியன் (சுப்பையா) துணைச் செயலர் புலவர்-தமிழ-நேயன் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று கூடித் தங்களின் தமிழ்ப்பணிக்கு ஏதேனும் உதவிட நினைந்து கலந்துரையாடி, தென்மொழியின் வளர்ச்சிக் கொடையாக உருபா நூறும் (100/-) தென்மொழியின் ஆண்டுக் கட்டணம் உருபா இருபத்து நான்கும் (24/-) ஈந்திடல் வேண்டுமென தீர்மானமே செய்து, அத்தொகையினைப் பணவிடை வழியாக 3—1—91ஆம் நாள் தங்களுக்கு அனுப்பியுள்ளேன். தொகையினை பெற்றுக் கொண்டு திங்கள்தோறும் 'தென்மொழி' அனுப்பிவைக்க வேண்டுமாய் மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். வெல்க தூயதமிழ்! அன்புடன். — பாவலர். வேல். இளங்கோவன், தலைவர், பாவேந்தர் இலக்கியப்பேரவை (பெரம்பலூர்.) இலாடபுரம்.

ட : 1441 : தம் வாழ்நாளைத் தமிழ்மொழி, தமிழினம் தமிழ்நாடு ஆகிய மூன்றின் வளர்ச்சிக்காக வாரி இறைத்த எங்கள் வான்சுடரே! தமிழ் நில விடுதலைக்காகத் தளராமல் பாடாற்றும் எங்கள் தவக்கொழுந்தே! தங்கள் வாழ்நாள் தங்க ஒளிபாய்ச்சும் சூரியனையும் வெல்லும். எல்லாம் வல்ல பேரியற்கைத் தங்களின் அடிச்சுவடு நிழலாக வந்து வலிவூட்டிக் காக்கும். மறைமலையார், திரு. வி. க, பாவாணர் ஆகியவர்களைப் பாவலரேறுவின் உருவத்-தில் உழைப்பில் உயர்பண்பில் காண்கிறேன். என்னைப் போன்ற-வர்களை உருவாக்கிவிட்ட என் அன்பு தெய்வமே! தங்கள் தமிழ்த் திருவடிகளை என் தலையால் வணங்குகிறேன். வணக்கம்.

— இரெ. தமிழ்வேந்தன், மேல்நல்லாத்தூர்.

O : 1442 : பேரன்பு நிறைந்த சான்றோர்க்கு வணக்கம். மக்-களுக்கே, சிந்தித்து, அவர்களுக்கே வாழ்வை ஒப்படைத்து உரு-வாக்கிய தென்மொழியின் பயனை மக்கள் அறிந்து நம் தமிழினம் தழைத்து வளர இறைவனை இறைஞ்சுகிறேன். தா. அருட்கையன்,

(தொடர்ச்சி உள்ளே 32- ஆம் பக்கம்)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)